பதிவுப்பத்திரிகைக்காக
பதிவுசெய்யப்பெற்றது

# இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணிமீ உ௪
ஆரம்பமானது.

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ௵ 1 க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொலைவாப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | ரூ. | 9-40 |
| ,, அரைக்கலம் | ரூ. | 5-00 |
| ,, கார்கலம் | ரூ. | 3-15 |
| ,, ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭ } யாழ்ப்பாணம்:—குரோதன௵ ஆவணிமீ ௧௨௨; (1925 ஆகஸ்ட் 27) வியாழக்கிழமை. { இலக்கம்—௧௬

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகனருள்வணங்கிவாழ்வாம்

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

**ருக்மணிகுக்கர்தான்.**

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வாதராஜலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
| விலை | ரூபா | 13. | 18 | 22 | 27 33. |

விபர புத்தகம் இனும். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.

[ESTABLISHED 1609]

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்,
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடுழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய மான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீரெரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதிலுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனே நீங்க அறியவேண்டியதென்றே ஜனங்கள் நன்மைக்காக இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். டையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது டைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனுடியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo.
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

**Hakeem, M. Mohamed Ebraheem & Co;**
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
**POTO-NOvO (South India)**

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும்
அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது
உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன

## சிட்டுக் குருவிச சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினுலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவின்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானே? என நம் பலமுறையும் புகழ்வார்கள். ஆணாகப் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே குஹ்யரோகவாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினுலும் தேஹத்திற்கு சத்காரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேத்ப மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினுலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சித்திரபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினுல எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நாம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை காலசதி, தேஹகாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீசர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினுல் ஏற்பட்ட பலவிதமான நோய்களினுலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிறகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணம்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமைக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிசோதித்து செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இமிட்டேஷன் லேகியங்களை டை சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறுர்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களை தவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. டைமுழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 10—0—0 |
| 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 5—0—0 |
| பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | | 3—0—0 |

வி. பி. தபாற்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12ம், அரைபாகத்திற்கு அணு 7ம், கால்பாகத்திற்கு அணு 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புவோர்களுக்கு போஸ்டிங் சார்ஜ் இனும்.

கவனிப்பு:—பினங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டாஸ், மோரிஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணமாக மணியாடர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும். நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுருஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூநானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).


## ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கான தைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங் குணம் மறைந்துவிடுகிறது.

### லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சாக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சாக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம். அதனுல் அது உடனே லேவாயு, தலைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—ட—25.




(Y. 41. B.)

### வெளிவந்து விட்டது.

சிலநாட்களாக அச்சிலிருந்த சபையாருடைய நான்காம் பாலபாடம் சித்திரசகிதமாகவும் நல்வழி மூலமும் உரையும் முழுவதும் சேர்க்கப்பட்டும் பளபளப்பான காகிதத்தில் அழகுற அச்சிட்டு வெளிவந்திருக்கின்றதென்பதை ஆசிரியர்கட்கும் புத்தக வியாபாரிமாருக்குந் தெரிவிக்கின்றேம்.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ௵ ஆவணி ௴ ௨௨ ௳ வியாழக்கிழமை.

## தீவுப் பகுதி.

யாழ்ப்பாணத்தைச்சார்ந்த தீவுகளுட் சில மிகவும் கேவலமான நிலைமையில் இருக்கின்றனவென்பது உண்மையே. தீவுப்பகுதிப் பிரதிநிதியாகவிருக்கும் கௌரவ ஸ்ரீ துரைசுவாமியவர்களின் முயற்சியினால் ஊர்காவற்றுறை நெடுந்தீவு முதலிய இடங்களிலே அரசினர்வைத்தியசாலை யாதியாம் சில சௌகரியங்கள் விரைவில் அமைக்கப்படுமெனை அறியலானோம். சில தீவுகளில் வசிப்பவர்கள் பெரும்பான்மையும் மாரிக்காலத்திலே யாழ்ப்பாணப் பட்டினத்திற்கு அதிக கஷ்டமின்றிப் போக்குவரவுசெய்ய முடியாதவர்களாகவிருக்கிறார்கள். இவர்கட்கு அதிக கஷ்டமின்றிப் போக்குவரவு செய்தற்கான பாதைகளையும் வாராவதிகளையும் மிதப்புப் பாலங்களையும் அரசினர் அமைத்துவிடுதல் நன்றாகும். இத்தீவுப்பகுதிகளில் வசிப்பவர்கட்குச் சுகாதாரம், கல்வி, பிரயாணத்திற்கான வசதிகள், தாமதமின்றிக் கடிதப் போக்குவரவிற்கான மார்க்கங்கள், வைத்திய ஸ்தாபனங்கள் முதலிய சௌகரியங்களை அரசினர் விரைவிற் செய்தல்வேண்டும்.

ஆனால், தீவுப்பகுதியில் வசிப்பவர்களும் அவர்களுடையநன்மையைவேண்டிஉழைப்பவர்களும் விசேஷமாக அவதானிக்கவேண்டிய சிலவிஷயங்களை இங்கே கூறுகின்றேம். இக்காலத்தில் யார்யார்அதிகசௌகரியங்களை அனுபவிக்கிறார்களோ அவர்கள் அச்சௌகரியங்களைக்காட்டிலும் கூடியசங்கடங்களையும் அனுபவிக்க வேண்டியவர்களாக விருக்கின்றார்கள். தீவுப் பகுதிகளில் வசிப்பவர்கள் இக்காலத்தில் வறுமையிற் செம்மை என்றபிரகாரம் தங்கள் வயல்நிலங்களையும் தோட்டங்களையும் செய்துகொண்டு இவற்றேடு பனம் பண்டத்தின் பயனையும் பெற்றுக்கொண்டு இவற்றால் வரும் ஊதியத்தினால் ஒருவாறு காலங் கழித்து வருகின்றார்கள். இவர்கள் பட்டினப்பகுதியிலுள்ள சௌகரியங்களைத் தாங்களும்வேண்டிநிற்பரேல் பட்டினப்பகுதியிலுள்ள நவீனசீர்திருத்தங்களும் வறுமையும் அரசிறை யெனப்படும் வரிகளும் இத்தீவுப்பகுதிகட்கு, புதிதாசத் திறக்கப்படவிருக்கும் தெருவீதிகள்மார்க்கமாகவும் மோட்டரதங்கள் மார்க்கமாகவும் சென்று சேர்ந்துவிடும். காரை தீவாகவிருந்து இப்பொழுது "காரை நகர்" என வழங்கும் ஊர் இவ்வாறன கஷ்டத்தை இப்பொழுது அனுபவிக்கத்தொடங்கிவிட்டது. இத்தீவுப்பகுதி சிறிது திருத்தமுற, அங்கே சாகதார சங்கம், பட்டின பரிபாலன சங்கம் முதலிய சங்கங்களும் வந்து புக முயலும். இப்படிப்பட்ட சங்கங்களின் எல்லைகளுள் வசிப்பவர்கள் படும்பாடு இத்துணைத்தேயன்பதை யாம் அனுபவவாயிலாகச் சொல்லுதல் முடியும். யாழ்ப்பாணப் பட்டின எல்லையுள் இருப்பவர்களுள் அநேகர், அவர்களுள்ளும் ஏழைகளாகவுள்ளவர்கள், இங்குக் குடியிருத்தலை யொழித்து நாட்டுப்புறத்துப் போய் வசித்தாலோவென்று விரும்புகின்றார்கள். இவைகளையெல்லாம் புதியதிருத்தத்தை விரும்பும் தீவுப்பகுதியிலுள்ளவர்கள் சிந்தித்தல்வேண்டும். நமது அரசினர் யாதும் திருத்தஞ் செய்யப் புகும்போது இன்றேல் யாதும் சௌகரியங்களைச் செய்யப் புகும்போது அவற்றை அனுபவிக்கவிருக்குஞ் சனங்கள்மீதே அவற்றிற்காகியசெலவையும் வரியாக அறவிட முயல்வர். மேலும் எமது அரசினர் பிரசைகட்குச் செலவிற்காகிய மார்க்கத்தைக் காட்டுவரேயன்றி வரவிற்கான மார்க்கத்திலே துணைசெய்ய இயலாதவர்களாக விருக்கின்றனர். இவற்றையெல்லாம் நமது தீவுப்பகுதிகளில் வசிப்போர் நன்குசிந்தித்து இன்றியமையாச் சில திருத்தங்களை விரும்புவதன்றி அதிக திருத்தங்களையும் சௌகரியங்களையும் இச்சமயத்தில் விரும்பாதொழிதலே புத்தியாதும்.

## எம்பிரான் தூதுசென்றமை.

எமது சமயகுரவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் அதிகநேரம் பிரிந்துநின்ற கன்று தாய்ப்பசுவின் பக்கலை நாடி விரைந்தோடு வதுபோலத் திருவாரூரை அதிவேகமாகச் சென்றடைந்தார். அவர் அங்குள்ள தேவாசிரய மண்டபத்தை வணங்கியபின் வன்மீகநாதருடைய திருச்சந்நிதியிற் சென்று "அடியேனுக்கு வலதுகண்ணையும் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார்; "மீளாவடிமை யுமக்கேயாளாய்" என்னும் வாக்கியத் தொடரையுடைய தேவாரத் திருப்பதிகம் பாடியருளினார். அப்பாடலின் ஈற்றில் "அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால், வாளாங்கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்துபோதீரே" எனக் குறிப்பிட்டனர். அவரது துயரங்கண்டு சகியாத கிருபாசமுத்திரமாகிய வன்மீகநாதர் எமது நாயனாருக்கு வலது கண்ணையும் கொடுத்தருளினார். கண்களிரண்டும் பழமைபோலானமை கண்டவன்றெண்டர் பன்முறை பூமியில் வீழ்ந்தார்; எழுந்தார்; பரவசமுற்றார்; ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்; ஆனந்தக்கூத்தாடினார்; இரு கண்களாலும் வன்மீகநாதரைத் தரிசித்தார்; பின் அங்கிருந்து புறப்பட்டுத் தேவாசிரய மண்டபத்தையடைந்து அடியார் கூட்ட மத்தியில் வீற்றிருந்தார்.

பித்தன் என்னும் ஓர் உண்மைத் திருநாமத்தைச் சிவபெருமானுக்குச் சூட்டியருளிய எமது நாயனாரைச் சூழ்ந்து சென்ற பரிசனங்களிற் சிலர் தம்பிரான் தோழருடைய வரவைப் பரவையாருக்குத் தெரிவிக்கும்பொருட்டு அப்பெண்ணரசியின் மாளிகைக்குச் சென்றார்கள். நாயனார் திருவொற்றியூரிலே சங்கிலியாரை விவாகஞ்செய்துகொண்ட சமாசாரத்தை முன்னரே பரவையார் அறிந்துள்ளவராதலினால் அங்குச் சென்ற பரிசனங்களைத் தமது மாளிகைப்புறத்திற்றானும் தங்கவிடாது துரத்தினர். அவர்கள் நாயனார்பால் மீண்டுச் சென்று பரவையாரது கொள்கையை அவருக்கு வெளியிட்டார்கள்.

பரவையாருடைய நிலைமையைக் கேள்வியுற்ற நாயனாரது மனங் கலங்கியது. "இனி இதற்கு யாது செய்வோம்" என அவர் சிறிதுவேளை சிந்தித்தபின் பரவையார் கொண்ட கோபத்தைத் தணிக்கும் பொருட்டு லௌகிக விஷயத்தில் வல்ல சில முதியோரை அவர்பாற் போக்கினர். முதியோர் பரவையாரிடம் சென்று சற்கார வசனம் புகன்று பலவித நியாயங்களை எடுத்துக் கூறி இசையும்பொருட்டு வேண்டினார்கள். அம்மையார் கோபம் அதிகரிக்கப்பெற்றவராய "இனிமேல் இந்த விஷயத்தையிட்டு யாரும் பேசுவீர்களாயின் யான் பிராணத்தியாகஞ்செய்வேன்" என்றார். இதனைக் கேட்ட முதியோர் சிறிதுந் தாமதமின்றிப் புறப்பட்டு நாயனாரிடஞ் சென்று நடந்த சமாசாரங்களைக் கூறி அகன்றார்கள். தம்பிரான்றோழரும் துயர்க் கடலுள் மூழ்கினார். அன்றிரவு எல்லோரும் நித்திரைசெய்த பின் நாயனார் துயிலின்றி அதிக நேரம் வருந்தினார். அவர் சிவ்பிரானுடைய திருவடிகளைத் தியானித்து "எம்பெருமானே! அடியேனை இந்தப் பேராபத்தினின்று காத்தருளவேண்டும்" என முறையிட்டார். கருணாநிதியாகிய சிவபெருமான் நாயனார்முன் பிரசன்னமாகி "உனக்குநேர்ந்த இடர் யாது" எனக் கேட்டருள, நாயனார் "பெருமானே! தேவரீருக்கு மீளா அடிமையாகிய சிறியேன் மீது பரவை கொண்டுள்ள கோபத்தைத் தணித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தார். எம்பெருமானும் நாயனாரது முறையீட்டிற்கிரங்கிப் பரவையார் திருமாளிகைக்குத் தூது செல்வாராயினார். (நான் எனது என்னும் அகங்கார மமகாரங்களை ஒழித்து உடல் பொருள் ஆவி மூன்றையும் சற்குருவின் திருவடிகளுக்கு அர்ப்பணம் செய்து திருவருள் வழியே ஒழுகும் மெய்யடியார்கள் உலகிற் பிராரத்துவத்தைப் புசிக்குமிடத்துத் திரிகாரணங்களாற் செய்யப்படுவன அவர்களுக்கு ஆகாமியமாய் ஏறுவன்னம் தடுத்தருளல் அப்பரம் பொருளின் கடனும். அன்றியும் "சிவனுமவன் செய்திடெய லாங் கஞ் செய்தீ" என்றபடி முதன் மாணாக்கருக்குரிய சுக துக்கங்களையெல்லாம் ஆசிரியர் தமாதாகக்கொண்டு நடாத்தி முடிப்பித்து ஈடேற்றியருளுவரென்பதும் எமது உண்மைச் சமய நூற்றுணிபாகும். பரம்பொருளாகிய சிவபெருமான் எமது சமய நூல் கூறும் இந்த உண்மைப் பொருளை இதுபோன்ற சந்தர்ப்பங்களிலேயே முன்னிலைப்பட்டு விளக்கியருளுவர் நாயனாருக்கு இந்த உண்மைநிலையை அநுபவரீதியாகக் காட்டும் பொருட்டும், நம்மனோர் அறிந்து உய்ந்து ஈடேறும் பொருட்டும் எல்லாம் வல்ல—எங்கும் நிறைந்த—எல்லாமான பரம்பொருள் தமது மீளா அடிமையாகிய நாயனார் பொருட்டுப் பரவையாரது திருமாளிகைக்குத் தூது சென்றாரென்பதாம்.)

வேண்டிய வேண்டிய வடிவம் கொள்ளும் பேராற்றலையுடைய எமது அன்மரக்ஷகர் இச்சந்தர்ப்பதிலே வன்மீகநாதரை அருச்சிக்கும் ஆதி சைவப்பிராமணர் ஒருவரது வேடந்தாங்கிப் பரவையாரது திருமாளிகைக்கு அன்றிரவு எழுந்தருளினார். தம்பிரான்றோழர் திருவாரூரை அடைந்தமையையிட்டு ஆறுதலுற்று வருந்தும் பரவையார் வெளிக்கதவடைத்தபின் வழமைபோல நித்திரைக்குச்சென்றார். பெருநன்மை பயப்பனவாகிய சகுனங்கள் பல அவருக்காயின. அவர் மனம் அதிகம் வருந்தியமையினால் நித்திரையின்றிப் பாயலிற்கிடந்தார். அருச்சகர் வேடந்தாங்கிய எமது பரம்பொருள் அம்மையாரது புறக்கடைவாயிலை அடைந்து தமது அருமைத்திருக்காத்தினாலே கதவிற்றட்டி "பரவையே கதவைததிறக்குதி" என்றார். துயிலின்றி வருந்தும் பரவையார் எழுந்து விரைந்து சென்று கதவைத்திறந்து பார்க்கும்போது வன்மீகநாதரை அருச்சிக்கும் ஆதிசைவர் நிற்பதைக்கண்டு "தேவரீர் இந்த அந்தயாமத்தில் இங்கெழுந்தருளிய காரணம் யாது?" என்றார். இதனைக்கேட்ட ஆதிசைவர் "பரவையே! சுந்தரமூர்த்திநாயனார் இங்குவருதற்கு நீ உடன்படுதல் வேண்டும்" எனலும், பரவையார் "சுவாமீ! திருவொற்றியூரிலே சங்கிலியினாற் பிணிக்கப்பட்ட அவருக்கு இங்கோர் சார்புண்டாகுமா? இனிமேல் நீர் இந்த விஷயத்தையிட்டு எனது வீட்டுக்குவருதல் உமது பெருமைக்குத்தக்கதன்று. நான் ஒருபோதும் அதற்கிசையமாட்டேன் நீர் போய்விடும்" என்றார். வேதியர் பெருமான் அந்த வார்த்தையைக் கேட்டுப் புன்முறுவல்செய்து தமது தோழர்பால் எழுந்தருளினார்.

தம்பிரான் தமதுவரவை யெதிர்நோக்கியிருந்த தோழர்பாற்சென்று "உனது வேண்டுகோட்கிசைந்து நாம் பரவையிடம் பேசினேம். அவள் அதற்கிசைந்திலள்" என்றார். நாயனார் பின்னரும் இரந்துவேண்டுதலும் எமதுசிவாயபதி இரண்டாம் முறை பரவையார் திருமாளிகைக்கு எழுந்தருளினார். ஒருபோதும் அந்தசாமவேளையில் தமது இல்லத்துக்கு வாராத அருச்சகர் இன்று அங்குச்சென்றமையும், முன்னரே பல சுபசகுனங்கள் உண்டானமையும் பிறவும் அவருள்ளத்தை ஈர்க்கத்தொடங்கின. ஈற்றில் அங்கு எழுந்தருளியவர் சிவபெருமானேயெனப் பரவையார் உணர்ந்தார். அவர் அதிக பயங்கொண்டார்; உடல் நடுங்கினார்; "அருச்சகர் வேடந்தாங்கி என் சிறு குடிற்கெழுந்தருளிய பெருமானைப் பாவியேன் மதித்தேனில்லை" என வருந்தினார்; "இன்னமும் ஒரு முறை அப்பரம்பொருள் தமது அருமைத்திருவடிவாருந்த இங்கெழுந்தருளும் பாக்கியம் பெறுவேனே? அங்ஙனம் எழுந்தருளுவரேல் யான் உய்ந்துகடைத்தேறுவேன்" என்று கூறிப் புறக்கடையிலில் எதிர்பார்த்திருந்தார்.

மீண்டும் சிவபெருமான் அங்கெழுந்தருளியமைகண்ட பரவையார் ஓடிச்சென்று அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி "எம்பெருமானே; தேவரீரது திருவிளையாடலின் பெருமை இத்துணைத்தென உணரமாட்டாத அறிவிலிசெய்த அபராதத்தைப் பொறுத்துக்காப்பாற்றியருளவேண்டும்" எனப்பணிந்தார். பின்னர் எம் பரம்பொருளுடைய திருவாக்குக்கெதிர்வாக்குக்கூறாது சுந்தரமூர்த்திநாயனாருடன் வாழ்வதற்குப் பரவையார் இசைந்தனர். எம்பெருமானும் தமது தோழர்பால் எழுந்தருளித் தாம் தூதுசென்று ஜெயமடைந்த சந்தோஷ சமாசாரத்தை அவருக்குக்கூறிப் பரவையார் திருமாளிகைக்குச் செல்லுமாறு பணித்தருளினார். எமது சமயகுரவரும் சிவனடியார்கள் தம்மைச் சூழ்ந்துசென்று பரவையார் மனையை அடைந்தார். பரவையார் எதிர்சென்று நாயனாருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அழைத்துச்சென்றார். நாயனார் அங்குச் சின்னாள் இனிது வாழ்வாராயினார்.

## உலகம் பலவிதம்

(முற்றொடர்).

கோனேரிவீட்டின் ஒரு புறத்தேயுள்ள கிணற்றுள் ஏதோ ஒரு பாரமான பொருள் அதிக சத்தத்துடன் வீழ்ந்தது. சிறிது நேரஞ் செல்ல நூறுறாத்தலுக்கு மேற்பட்ட பாரங்கொண்ட ஒரு பெரிய கல் அக்கிணற்றுளிருந்து எழுந்து வெளியேவந்துவீழ்ந்தது. இதனைக் கண்டமாத்திரத்தே அங்கு இவ்வதிசயத்தைப் பார்க்கும்படி வந்து கூடியவர்களுள் அநேகர் தங்களுக்கும் ஏதும் அபாயம் வருதல் கூடுமென்று பயந்து அவ்விடத்தை விட்டு நீங்கினர். இந்தப் பேயின் சேட்டைகளுக்கெல்லாம் நான் முன்னேசொன்ன இளம்பெண்தான் காரணமாக இருக்கவேண்டுமென்ற ஒரு எண்ணம் என் மனதிற்புலப்பட்டது. ஏனென்றால் இவ்விளம்பெண் நிற்குமிடத்திலேயே அதிகமான மண்ணுங்கட்டிகளும் கற்களும் வந்துவிழ்ந்தன. கோனேரி வீட்டின் பக்கத்தேயுள்ள வயலிற் போயிருக்கும்படி அந்த இளம் பெண்ணுக்கும் கோனேரியின்மனைவிக்கும் சொன்னேன். அவர்கள் அப்படியே போயிருந்தார்கள். உடனே, எவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாக மண்ணுங்கட்டிகளும் கற்களும் அவ்விருவர் பக்கத்தும் வந்துவீழ்ந்து குவிந்தன. இந்த வயலில் மண்கட்டிகள் வந்து வீழ்ந்தமையோடு அமையாது வீழ்ந்துகிடந்த மண்கட்டிகளுட்பல பின்னர் நான்கு ஐந்து அடி உயரத்திற்கு எழுந்து உயிருள்ளவைகள் போலக் கூத்தாடத்தொடங்கின. இது நிகழும்போது பகற் பதினொருமணிவரையிலிருக்கும். இதனை நூற்றுக்கணக்கான சனங்கள் அச்சத்தோடும் ஆச்சரியத்தோடும் பார்த்துகொண்டு நின்றார்கள்.

* * *

நான் அந்தப் பேயைக் கண்ணுற் பார்த்துவிடலாமென்று ஆனமட்டும் பிரயாசப்பட்டேன்; வாய்க்கவில்லை. எனக்கு ஒரு புதிய யோசனை உண்டானது. அந்த இளம் பெண்ணை ஒரு அறையுட்கொண்டுபோய் விட்டுப் பூட்டிவிட்டால் என்ன நிகழுமோவென்பதை அறிய விரும்பினேன். நானும் அந்த இளம்பெண்ணும் கோனேரியின் மனைவியும் ஒரு அறையுட் புகுந்தோம். அந்த அறைக்கு நான்கு பக்கமும் சுவர்களும் ஒருசிறிய வாசலுமுண்டு யன்னல்களில்லை; நாங்கள் மூவரும் ஒருவருக்கொருவர் சமீபமாக அறையுளிருந்தோம். மற்றவர்களெல்லோரும் வெளியே நின்றார்கள். நேரம்பகல் இரண்டுமணிவரையிலிருக்கும். அறையுட் போதிய வெளிச்சமுண்டு. நான் பேயை நோக்கி "ஐயா, பேயாரே, இப்பொழுது உம்முடைய அற்புதங்களைக்காட்டும்" என்றேன். நாங்கள் இருந்த அறையில் எங்கள் தலைக்குமேலாக ஒரு உறிகட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. அந்த உறியில் ஒரு தொன்னையுள் ஏதோ தண்ணீர்ப்பதார்த்தம் வைக்கப்பட்டிருந்தது. ஏதோ இரைவதுபோன்ற ஒரு சத்தங் கேட்டது. நான் உறியை அண்ணார்ந்து பார்த்தபோது அதிலிருந்த தொன்னை உறியைவிட்டு எழும்புவதுபோலக்காணப்பட்டது. அத்தொன்னை சிறிது எழுந்து என்தலைக்குநேரே வந்தவுடன் கவிழ்ந்தது. தொன்னையிலிருந்த பதார்த்தம் முழுவதும் என்தலையிற் சிந்துண்டது. நான உண்மையாகச் சிறிது பயந்துவிட்டேன். பின்னர் என்மனத்தை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு "பேயே நீ எனக்கு இந்தவேலை செய்யலாமா" என்றேன். மறுமொழி யாதுமில்லை; சிறிதுநேரஞ்செல்ல அந்த உறியிற் பின்னரும் ஒரு இரைச்சல் கேட்டது. அது என்னவென்று பார்த்தேன். அந்த உறியிலேயிருந்த மாவையெனப்படும் மரப்பாத்திரமொன்று உயிர்பெற்று எழும்புவதுபோல் அவ்வுறியைவிட்டுநீங்கி என்தலைக்குநேராக மேலே வந்தவுடன் கவிழ்ந்தது. கவிழ்ந்தவுடனே அதிலிருந்த தண்ணீர்ப்பதார்த்தம் முழுவதும் என்தலையை முற்றாய் நனைத்துவிட்டது. அது என்னவென்று பார்த்து உப்புத்தண்ணீரெனக்கண்டு என் தலையைத்துடைத்துக்கொண்டேன். இது இரண்டாவது விளையாட்டு. இனி மூன்றாவது விளையாட்டைச் சொல்லுகின்றேன். நாங்கள் இருந்த அறையின் ஒரு மூலையில் 5 அடி நீளமுள்ள ஒரு மூங்கிற்றடி சுவரிற்சாத்தப்பட்டிருந்தது. இந்த மூங்கில் சிறிது அசைவதுபோற் காணப்பட்டது. பின்னர், சுவரிற் சாருதலின்றி நிமிர்ந்து நின்றது. நிமிர்ந்து நின்றபின் தத்தித்தத்தி அந்த மூங்கில் எனக்குச்சமீபத்தில் வரத்தொடங்கியது. சமீபத்தில் வந்தவுடன், ஒருவர் தமது இருகைகளினாலும் அந்த மூங்கிற்றண்டில் ஒரு அலியைப் பிடித்து அடித்தால் எவ்வளவு தாக்கமாக இருக்குமோ அவ்வளவு தாக்கமாக ஒரு அடி நிலத்தில் அடிக்கப்பட்டது. அடி.

(ஐந்தாம் பக்கம் பார்க்க.)

## 105 பேர் இறந்தனர் 216 பேர் காயப்பட்டனர்.

இந்த ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதிக்கும் 17-ந் திகதிக்குமிடையில் இங்கிலாந்திலே மோட்டார்யமனுல் 105பேர் இடறிக்கொல்லப்பட்டார்கள்; 216பேர்காயப்பட்டனர்.

## அரசினரின் பலாச்செய்கை

கழுத்துறைக்குச் சமீபமாயுள்ள நூறு ஏக்கர்விசாலமானஓர் இடத்திலே அரசினர் பலாமரங்களை நாட்டி வளர்த்து வருகின்றார்கள். அவை செழிப்பாய் ஓங்கிவளருகின்றன, இன்னும் இரண்டுவருடத்தில் காய்க்கக்கூடுமென உத்தேசிக்கப்படுகின்றது. இதனுல் அரசினருக்கு அதிகவருவாய் கிடைக்குமாம்.

## தொப்பிதோட்டம் இந்து வாலிபர் சங்கம்.

இந்த ஆகஸ்டுமீ 21௳ வெள்ளிக்கிழமை மாலை ஆறுமணியளவில் மேற்படி சங்க ஆதரவில், சென்னை பிரமஞான சபையிலிருந்துவந்த மாகாணக் காரிய தரிசியாகிய பிரம்மஸ்ரீ பெ. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் "இருவினை ஒப்பு" என்னும் விஷயத்தில் ஓர் அரிய பிரசங்கஞ் செய்தனர். சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீ க. நடராசா அவர்கள் குறிப்புரை கூறியதுடன் ஐயரவர்கள் இவ்விடத்திற்குவந்து இவ்வருமபெரும்விஷயத்தைச் சபையாருக்கு நன்கு விளங்குமாறு பிரசங்கித்ததற்காக அளவிறந்த ஸ்தோத்திரங்கூறி முடித்தனர். இவ்வளவில்கூட்டம்நிறைவேறிற்று. கடித.

## இரு ஐரோப்பியருக்காகப் புகைரதம் நிறுத்தப்பட்டமை.

சென்ற வெள்ளிக்கிழமை பகற் பதினொன்றேமுக்கால் மணிவரையில் மாத்தளையிலிருந்து புறப்பட்ட புகைரதம் மேற்படி ஸ்தானத்தைவிட்டுச் சிறிதுதூரம் சென்றவுடன் நிறுத்தப்பட்டது. வண்டியிற் பிரயாணம் செய்தோரும் பிறரும் நிறுத்தப் பட்டமைக்குக் காரணம்யாதென உற்றுநோக்கினர்கள். இரு ஐரோப்பியர் புகைவண்டியை நோக்கிக் குறுக்கிட்டுவருவதைக்கண்டார்கள், மேற்படி ரதம்நிறுத்தப்பட்டவுடன் காவலர் கீழே இறங்கி ஐரோப்பியருக்குரிய சில "பார்ஜல்"களையும் பிற பொருள்களையும் வாங்கி வண்டிக்குள் வைத்தபின் அவர்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். இந்தவிஷயமாகப் புகைரதப்பகுதிமேலதிகாரிகளுக்கு முறையிடப்பட்டிருக்கிறதெனச் சொல்லப்படுகிறது. நம்மவர் ஒருவரை அங்ஙனம் ஏற்றிச் செல்வதற்குப் புகைரதப்பகுதியாருடைய பிரமாணம் சிறிதும் இடங்கொடாது. ஐரோப்பியராயின் அவர்கள் விரும்பியதைச் செய்வதே புகைரதப்பகுதியாரின் நோக்கம்போலும். ஒரு கால் அந்தப் பிரமாணத்தை மீறின அது குற்றத்தின்பாற் படாதெனவும் கொண்டனர்போலும்.

## நரபலிதேடும் வேடதாரிகள்.

இந்த ஆகஸ்ட்மீ 19௳ புதன்கிழமை குருநாக்கலிலே மஞ்சள் உடைதரித்த இந்தியவேடதாரி ஒருவன் பாடசாலைக்குச்சென்ற ஒரு சிறுமியைப் பலி கொடுப்பதற்காகத் தூக்கிச்செல்ல முயன்றான். இத்துர்க்கருமம் கைகூடுமுன் சனங்கள் அங்குவந்து கூடினார்கள். இச்சமாசாரம் பொலீசருக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலீசர் வருவதற்குமுன் அங்குக்கூடிய சனங்கள் வேடதாரியைப் பன்முறை நையப்புடைத்தார்கள். பொலீசர் அவனை உடனே பொலிஸ்தானத்துக்கு அழைத்துச்சென்றார்கள். அவன் மறுநாட்காலை அங்குள்ள பொலீஸ்கோட்டுக்குக் கொண்டுபோகப்பட்டான். குறித்தவேடதாரி தன்பெயர் ஆனந்தசாமி என்றும், தான் சிங்களவனென்றும், அதிககாலம் இந்தியாவில் வசித்து இந்துசமய நூல்களைப் படித்திருப்பதாகவும், இப்பொழுது சமயத்தைபற்றிப் பிரசங்கம் செய்வதற்காக இங்குவந்திருப்பதாகவும், தான் தெருவழியே செல்லும்போது ஒரு ஆசிரியர் தன்னுடன் சென்றபிள்ளைகளுக்கு என்னைச் சுட்டிக்காட்டி "இவன் பிள்ளைகளைப் பிடித்துப் பலிசெலுத்தும் சந்நியாசி" எனக்கூறினரென்றும், அப்பொழுது அங்குநின்றோர் தன்னைப் பிடித்தார்களென்றும் கூறினன். நீதிபதி எதிரியைப் பிணையில விட்டிருக்கின்றனர். வேறுமொரு இந்திய சந்நியாசி பலிசெலுத்தும் பொருட்டு இன்னொரு சிறுமியைத் தூக்கிச் செல்லமுயன்றபோது பொலிசாரற் பிடித்துச் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றனன். இந்த இருவேடதாரிகளும் நரபலிசெலுத்திப் பூமியின்கீழ் மறைந்துகிடக்கும் திரவியத்தை எடுப்பதற்காக ஒத்துழைக்கின்றார்களென அங்குள்ளார் பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

## விவாகம்.

சென்ற வெள்ளிக்கிழமை(21—8—25) இரவு ஒன்றரைமணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் ஏழாலை ஸ்ரீ மூத்ததம்பி அவர்களின் ஏக புத்திரன் ஸ்ரீ செல்வரத்தினமவர்களுக்கும் உடுப்பிட்டி ஸ்ரீ ச. செல்வத்துரை யவர்களது சிரேஷ்ட புத்திரி ஸ்ரீமதி நல்லம்மாளுக்கும் விவாகம் சிறப்பாக நடைபெற்றது. தம்பதிகள் இனிதுவாழும்வண்ணம் கதிர்காமவேலவர் திருவருள்முன்னிற்பதாக.

## அமெரிக்காவுக்குச் செல்லும் சமயப்பிரசாரகர்.

அமெரிக்கா நியூயோர்க்கில் சர்வதேச உபந்நியாசசபையென்று ஒரு சபை இருக்கிறது. அந்தச் சபையார், சுவாமி சிரத்தானந்தர் என்பவரை அடுத்த ஆண்டில் புத்தர், ராமர், கிருஷ்ணன், சங்கரர், கபீர், முதலியவர்களைப்பற்றி எழுபது உபந்நியாசங்கள் செய்யுமாறு அழைத்திருக்கிறார்கள். * உபந்நியாசம் ஒன்றுக்கு நானூறு டாலர் வீதம் அந்தச் சபையார் கொடுப்பார்களாம். (டாலர் சுமார் மூன்று ரூபா) அதனால் வருந் தொகையைச் சர்வசமயக் கல்விக்கழகம் ஒன்று இந்தியாவிலே கட்டுவதற்காகச் செலவிடுவார்களாம். சுவாமியுடன்சமயஞானிகளானவேறுசில அறிஞர்களும் செல்வார்கள். இந்தச் சுவாமியைத் தலைவராகக் கொண்ட ஆக்ரா சாது சமிதியார், காலஞ்சென்ற குவாலியர் மகாராஜாவுக்கும், தேசபந்து தாசருக்கும் இரண்டு லட்சத்துக்கு மேலே செலவிட்டு, வெள்ளியினாலே உருவச்சிலைகள்செய்து தேசத்திற்குச் சமர்ப்பிக்கப்போகிறார்கள். லோ—ரி.

## உலக ஜாதகம்.

கிரிம் என்ற ஜர்மன் ஜோசியர் 1971-ம் வருஷம்வரை உலகத்திற்கு ஜாதகம் எழுதியிருக்கின்றாராம்; 1926-ல் பெண்களின் புரட்சி ஒன்று ஏற்படுமாம். அத்துடன் பெரிய பஞ்சமும் நீர்வரட்சியும் ஏற்படுமாம். ஆறு, குளம், குட்டை, கிணறுகள் எல்லாம் வற்றிப்போகுமாம். ராஜ்யப் புரட்சியால் ஒரு அரசர் அல்லது குடியாசுத் தலைவரைப் பதவியிலிருந்தும் நீக்கிவிடுவார்கள். ஆஸ்டிரியா-வின் அல்ப்ஸ் மலைப் பிரதேசத்தில் ஒரு பெரிய பூகம்பம் ஏற்படும். 1927-ல் ஜனங்கள் சேவலமாயிருக்கும். சேனைகளெல்லாம் தங்களுக்குள் சண்டையிடும். 1928-ல் ஒரு பெரிய ராஜா இறந்துபோவார்; அகஸ்மாத்தம் ஒரு பெரிய யுத்தம் தோன்றி விரைவில் மறையும்; 1930 முதல் 1940 வரை ஐரோப்பாவெங்கும் புரட்சியாயிருக்கும். நோய்களும் பஞ்சமும் உலகமெங்கும்பரவி வருத்தும். ருஷியாவில் பழைய அரசகுலத்தவர்கள் சேர்ந்து புரட்சிவிளைத்துத் தலைமை பெறுவார்கள். 1971-ல் பிரான்சில் மீண்டும் அரசாட்சிதோன்றும்; அதனுல் அதுமிகுந்தபூமியை இழக்கும்.

லோகோபகாரி.

## திரிகோணமலை மாதர் ஐக்கிய சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டமொன்று சென்ற ஆடிமீ ௧௧௳ ஸ்ரீமதி செ. உருக்குமணி அம்மாளுடைய அக்கிராசனத்தின்கீழ் ஆரம்பமாயது. அந்த அம்மாளினுலேயே "பதிவிரதா தர்மம்" என்னும் விஷயம் எழுதி வாசிக்கப்பட்டது. ஸ்ரீமதி வே. பரமபாக்கிய அம்மாளாலும், ஸ்ரீமதி ந. நீலாயதாட்சி அம்மாளாலும் குறிப்புரைகள் கூறப்பட்டன பாடசாலைச் சிறுமிகள் சிலராலும், ஸ்ரீமதி பொன்னம்மாள ஸ்ரீமதி இரத்தினம்மாள் ஸ்ரீமதி பரமபாக்கியம்மாள் ஆகியோராலும் தேவாரபாராயணம் நிகழ்த்தப்பட்டபின் சபை முடிவுற்றது. இச்சங்கத்தின் மற்றோர் கூட்டம் ஆடி மாதம் ௨௭௳ ஆரம்பமாயது. பிரம்மஸ்ரீ ச. அப்பாத்துரை சர்மா அவர்களால் "வன்னியும் கிணறும் லிங்கமும்" அமைந்த சரித்திரம் சங்கீத கதாப்பிரசங்கமாகச் செய்யப்பட ஸ்ரீமதி வே. பரமபாக்கியம்மாளாலும் பிரமஸ்ரீ பூரணனந்தேஸ்வரக் குருக்கள் அவர்களாலும் குறிப்புரையும் பாடசாலைச் சிறுமிகளால் தேவாரபாராயணமுஞ்செய்யப்பட்டுச் சபைகலைந்தது. இச்சங்கத்தின் இன்னுமொருகூட்டம் இந்தமாதம்௯௳ ஸ்ரீமதி விசாலாட்சிப்பிள்ளையின் சபைத்தலைமையின்கீழ் ஆரம்பமாயது. ஸ்ரீமதி நீலாயதாட்சி அம்மாளால் "மாதர் நீதி" என்னும் விஷயம் எழுதி வாசிக்கப்பட்டது. ஸ்ரீமதி நா. பொன்னம்மாளாலும் ஸ்ரீமதி இரத்தினம்மாளாலும் ஸ்ரீமதி தெய்வானையம்மாளாலும் ஸ்ரீமதி புவனேஸ்வரி அம்மாளாலும் தேவாரபாராயணமும், ஸ்ரீமதி தெய்வகாயகியம்மாள் ஸ்ரீமதி வள்ளியம்மாள் ஸ்ரீமதி விசாலாட்சிப்பிள்ளை ஆகியோரால் குறிப்புரையும் கூற பட்டன.

## எழுவருக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டமை.

சில மாதங்களுக்குமுன் கெயிரோவிலே சிதார் என்பவரைக் கொலைசெய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பெற்ற எழுவரும் சென்ற ஞாயிற்றுக்கிழமை தூக்கிலிட்டுக் கொல்லப் பட்டார்கள்.

## தீவிபத்து.

இந்த ஆகஸ்ட்மீ 18௳ செவ்வாய்க்கிழமை இரவு பாக்டாத் என்னுமிடத்துக்குச் சமீபமாயுள்ள பஸ்ராககரில்; ஒரு பெருந் தீவிபத்து நேர்ந்தது. அதனுல் ஒரு தெருவின் இருபக்கங்களிலுமுள்ள வீடுகளெல்லாம் சாம்பராய் எரிந்தன. நேர்ந்த நஷ்டம் 800000தங்கப்பவுணென மதிப்பிடப்படுகின்றது.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் திரிகோணமலை 8-ம் நம்பர்க் காசுக்கடைவீதி வெற்றிவேலு கனகசபை என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போதுதவணைதப்பி மேற்சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:

| நம். | ௳ | ரூ. | சத. | நகை விபரம். |
|---|---|---|---|---|
| | 1923-ம் ஆடி 12-ம்மீ | | | |
| 5428 | 27 | 50 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| | 1924-ம் ஆடி 1-ம்மீ | | | |
| 6703 | 18 | 17 | | இமிற் காதோலை சோடி 1 |
| 6706 | 18 | 8 | | வெ. குழற்காப்பு சோடி 1 ச. இ. பழுது |
| 6727 | 18 | 17 | | தோடு சோடி1 |
| 6745 | 18 | 50 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 6751 | 18 | 7 | | வெ. குழல்காப்புசோடி 1 |
| 6773 | 19 | 8 | | வெள்மட்டமணி 26 |
| 6785 | 19 | 20 | | மணி 30 |
| 6787 | 19 | 30 | | சவடி முகப்பு 1, மணிக் கோர்வை 2க்குமணி 82 |
| 6789 | 19 | 9 | | சவுக்கமணி 1க்கு மணி 24 ஓ இ |
| 6790 | 19 | 6 | | கொப்புச் சிமிக்கி சோடி 1 |
| 6802 | 19 | 10 | | சவுக்கமணி 1க்கு மணி 13 பழுது |
| 6818 | 19 | 6 | | வளையல் தகடு 7 |
| 6861 | 20 | 12 | | தங்கக்காப்பு 1 |
| 6909 | 21 | 6 | 50 | கூடு 1 பழுது |
| 6924 | 21 | 35 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 6951 | 21 | 55 | | கைச்சங்கிலி சோடி 1 முகப்பு இல்லை |
| 7001 | 22 | 6 | | குண்டுவைத்த அரைப் பவுண் 1 |
| 7002 | 22 | 20 | 04 | பொன் கொலுசுக்காப்பு சோடி 1 பழுது |
| 7003 | 22 | 10 | | 3 பட்டுமணி 1 பழுது |
| 7006 | 22 | 13 | | சிறுபதபிள்ளைக்கொடி 1 பழுது க. இ. |
| 7068 | 23 | 8 | | வெ. சிறுகநனை சோடி 2 |
| 7069 | 23 | 6 | | வெ. எஸ் கறளை சோடி 1 |
| 7130 | 24 | 9 | | வெ. எல கறளை சோடி 1 |
| 7182 | 26 | 12 | | குவளைக்கடுக்கன் சோடி 1 சுரை இல்லை. |
| 7200 | 26 | 50 | | சவடியுடன கொடி 1 |
| 7206 | 26 | 20 | 01 | வெ பாதசரம் சோடி 1 |
| 7211 | 26 | 7 | | மேலீடு சோடி 1 |
| 7246 | 27 | 13 | | தங்கக்காப்பு 1 |
| 7262 | 28 | 16 | | தோடு சோடி 1 |
| 7353 | 30 | 10 | | பின் கோர்க்கி 1 |
| 7368 | 30 | 9 | | தோடு சோடி 1 பழுது |
| 7370 | 30 | 250 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 31 சிரகபழுவுடன் 5 பட்டு மணிக்கோர். 1 |
| 7434 | 31 | 40 | | பதமிறை திருக்கொன்றை 1-க்கு மணி 53 |
| | 2-ம்மீ | | | |
| 7455 | 1 | 18 | | கைச்சங்கிலி 1 |
| 7461 | 1 | 8 | | வெ. குழல்காப்பு சோடி 1, வெ. சிறு அரைஞாண் கொடி க. இ. வெ. கால் மோதிரம் 6 |
| 7462 | 1 | 12 | | மோதிரம் 1 |
| 7479 | 2 | 6 | | கூடு 2 கல் 2 இல்லை |
| 7481 | 2 | 32 | | தாலிக்கொடி 1 |
| 7492 | 2 | 7 | | வளையல் 6 |
| 7533 | 3 | 12 | | வளையல் 8 |
| 7568 | 4 | 6 | | சிமிக்கி சோடி 1 |
| 7604 | 4 | 80 | | சிங்கமுகக் கொலிசுக்காப்பு சோடி 1 |
| 7607 | 4 | 10 | 04 | செருகுதோடு சோடி 1 |
| 7651 | 5 | 20 | | வெ. பாதசரம் சோடி 1 சுரை இல்லை |
| 7721 | 7 | 17 | | வெள்மட்டமணி 1-க்கு மணி 36 |
| 7743 | 7 | 12 | | தங்கப்பவுண் 1 |
| 7800 | 9 | 6 | | பொத்தான் 3 |
| 7837 | 9 | 7 | | மோதிரம் 1 |
| 7863 | 10 | 23 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 7873 | 10 | 28 | | பத. சவுக்கமணி 1-க்கு மணி 23 |
| 7876 | 10 | 12 | | வெ. கொலிசு சோடி 1 பழுது |
| 7889 | 10 | 15 | | பீலிக்காப்பு 1 கல் இல்லை |
| 7907 | 11 | 100 | | கம்பிப்பூரானட்டியல் 1, வெ. பாதசரம் சோடி 1 |
| 7954 | 13 | 25 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 |
| 7986 | 13 | 22 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 7990 | 13 | 8 | | இடைகுரி 12 |
| 7994 | 13 | 9 | | வெ. எஸ் கறளை சோடி 1 |
| 8006 | 14 | 50 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 8027 | 14 | 15 | | கைச்சங்கிலி 1 கல் இல்லை |
| 8062 | 15 | 12 | 40 | தோடு சோடி 1, கூடு 1 |
| 8103 | 16 | 20 | | இமிற் காதோலை சோடி 1 |
| 8137 | 16 | 13 | | ஒட்டுவளையல் 7 பழுது |
| 8146 | 17 | 13 | | இமிற். கடுக்கன் சோடி 1 க. இ. |
| 8170 | 17 | 15 | | வெ. எஸ் கறளை சோடி 1 |
| 8216 | 18 | 12 | | வளையல்8 பூ1இல்லை பழுது |
| 8292 | 20 | 10 | | படக்கூர் 1 |
| 8330 | 21 | 23 | | வெ. பாதசரம் சோடி 1 ச. ஒன்று இல்லை |
| 8331 | 21 | 6 | | வெ. குழல்காப்பு சோடி 1 |
| 8351 | 21 | 10 | | கற் தோடு சோடி 1 |
| 8387 | 22 | 6 | | வெ குழல்காப்பு சோடி 1 |
| 8415 | 23 | 20 | 04 | வெ. பாதசரம் சோடி 1 |
| 8447 | 24 | 11 | | பொன் கொப்பு சிமிக்கி தோடுமுறையே சோடி 1 ச. 1 வெள்ளி |
| 8491 | 26 | 24 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 8511 | 26 | 9 | | வெ. அரைஞாண் 1, கற் படக்கூர் 1 பழுது |
| 8533 | 27 | 6 | | பதக்கம் 1 |
| 8549 | 27 | 6 | | சிறு திருகு பூ 1 |
| 8571 | 28 | 18 | | கொப்பு சிமிக்கி சோடி 2, வெ. கறளை சோடி 1 |
| 8579 | 28 | 11 | | இமிற். சிகப்பு கடுக்கன் சோடி 1 ச. இ. |
| 8581 | 28 | 10 | | சிறுசெருகுதோடு சோடி1, டிம்மியுடன் பதக்கம் 1 பழுது |
| | 3-ம்மீ | | | |
| 8654 | 1 | 6 | | கொப்பு சிமிக்கி சோடி 1 பழுது |
| 8706 | 3 | 23 | | தாலித்தட்டு 1-க்கு தட்டு 8 குடம் 1 பழுது |
| 8805 | 6 | 12 | | படக்கூர் 1 |
| 8809 | 6 | 30 | | தாலிக் கொடி 1 பழுது |
| 8810 | 6 | 50 | | சிங்கமுகக்காப்பு சோடி 1 |
| 8824 | 7 | 300 | | தங்கப்பவுண் 4 உடன் சவுடிக்கொடி 1 |
| 8827 | 7 | 100 | | 5 பட்டிலை மாலை 1 |
| 8852 | 8 | 10 | | மேலீடு சோடி 1 |
| 8886 | 9 | 25 | | காதோலை சோடி 1 |
| 8909 | 10 | 100 | | மணிகோர்வை 1-க்கு மணி 37 |
| 8911 | 10 | 8 | | தோடு சோடி 1, வெ. 2பட்டரைஞாண் |
| 8958 | 11 | 13 | | தோடு சோடி 1 க. ச. இ., வெ. எஸ்கறளைசோடி1 |
| 8968 | 11 | 50 | 04 | தட்டுமுறுக்கு கூட்டம் 1 |
| 9025 | 13 | 16 | | வெ. பாதசரம் சோடி 1 |
| 9028 | 13 | 15 | | நாட்டுவாளி சோடி 1, வெ. சிறு பாதசரம் சோடி 1 |
| 9029 | 13 | 25 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 38 |
| 9036 | 13 | 6 | | படக்கூர் 1 |
| 9057 | 14 | 18 | | சிகப்புக்கடுக்கன் சோடி 1 சுரை இல்லை |
| 9091 | 15 | 30 | 04 | பொன் தாலிக்கொடி 1 |
| 9108 | 16 | 25 | | முத்துக் காதோலைசோடி1 |
| 9125 | 17 | 30 | | தாலிக்கொடி 1 ச. இ. |
| 9137 | 17 | 30 | | தாலிக்கொடி 1 பழுது |
| 9160 | 17 | 55 | | கம்பிப்பூரானட்டியல் 1 |
| 9171 | 17 | 6 | | மெ. குவளை சோடி 1 ச. ஒன்று இல்லை |
| 9209 | 19 | 80 | | ஒப்பின் காப்பு சோடி 1 கல் 3 இல்லை |
| 9222 | 19 | 6 | | கொப்பு சிமிக்கி சோடி 1 |
| 9267 | 21 | 7 | | வளையல் 2 |
| 9323 | 23 | 65 | | பீலிக்காப்பு சோடி 1 |
| 9324 | 23 | 62 | 50 | கொலிசுக்காப்பு சோடி 1 |
| 9336 | 23 | 6 | | சிறு திருகு பூ 1 |
| 9371 | 24 | 10 | | பவுண் முறுக்கு காப்பு 1 |
| 9374 | 24 | 48 | | மணிக்கோர்வை 1-க்கு மணி 35 |
| 9375 | 24 | 6 | | மோதிரம் 1 |
| 9397 | 25 | 48 | | தாலிக்கொடி 1 பழுது |
| 9423 | 25 | 30 | 20 | அரைப்பவுண் 2 உடன் பத. பிள்ளைக்கொடி 1 குண்டொன்றில்லை |
| 9441 | 26 | 12 | | குவளைக்கடுக்கன் சோடி 1 |
| 9496 | 28 | 13 | | தங்கக்காப்பு சோடி 1 |
| 9498 | 28 | 16 | | சவுக்கமணி 1-க்கு மணி 24 |
| 9538 | 29 | 10 | | கொப்பு சிமிக்கி சோடி 1 |
| 9600 | 31 | 60 | | தாலிக்கொடி 1 |
| 9624 | 31 | 30 | | சறடு 1 |
| | 4-ம்மீ | | | |
| 9667 | 2 | 250 | | தாலிக்கொடி 1 |
| 9668 | 2 | 250 | | பிரஞ்சு 1ன்கீழ் 5 பவுண் 45 கோர்த்த மாலை 1, ஒருபட்டுச்சங்கிலி 1 |
| 9676 | 2 | 14 | | தோடு சோடி 1 க. இ. |
| 9678 | 2 | 50 | 65 | கம்பிப்பூரானட்டியல் 1 பழுது |
| 9693 | 2 | 12 | | வெ. குழல்காப்புசோடி 1, சவடிமுகப்புடன் மணி 27. |
| 9724 | 3 | 15 | 04 | பவுண்காப்பு சோடி 1 |
| 9775 | 5 | 6 | | வெ. குழல்காப்பு சோடி 1 பழுது |
| 9787 | 6 | 10 | | கொப்பு சிமிக்கி சோடி 1, சிறு திருகு பூ 1 |
| 9803 | 6 | 15 | | பத. சவுக்கமணி 1-க்கு மணி 22 முறி |
| 9868 | 9 | 13 | | சவடிமுகப்பு 1 |
| 9934 | 10 | 14 | | வெ. பழைய கொலிசு 2 |
| 9937 | 10 | 7 | 50 | வெ. பழையகறளை சோடி1 |
| 9938 | 10 | 20 | | பெல்த் காப்பு 1 ச. இ. |

விற்பனவு:—1925-ம் ஆடி ஆவணிமீ 25-ந்திகதிக்குச்சரியான செப்டெம்பர்மீ (9-9-25) புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகைகள் பிறகீழ்காண பிரசித்த ஏலத்தில் மேற்படி கடையில் விற்கப்படும்.

க. கதிர்காமத்தம்பி,
செக்கிஸ்டேட்டர்.

(Mis 698)

## திரிகோணமலை ஆலடி விநாயகர் தொண்டர் திருக்கூட்டம்.

ஆலடி விநாயகர் அடிநிழல் அமர்ந்து அருள் பெறவேண்ட தமது தொண்டைக் கொண்டொழுகும் இக் கூட்டத்தார் வெள்ளிக்கிழமை தோறும் பஜனை நடாத்திவருகின்றனர். அவர்களின் வேண்டுதற்கிணங்கி, ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமத்து ஸ்ரீ. மா. பீதாம்பரப்பிள்ளை அவர்கள், விநாயக சதுர்த்தித் திருநாளாகிய சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு "விநாயக சதுர்த்தி விரதம்" என்னும் விஷயமாக ஓர் பிரசங்கம் செய்தனர். இரவு 9 மணி வரையிற் தேவார பாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. ஸ்ரீமத் விபுலாநந்த சுவாமிகள் சொற்பொழிவாளரைக் குறித்து ஒருசில உரைகள் கூறிய பின்பு, ஸ்ரீ. பீதாம்பரம்பிள்ளை அவர்கள், மாதுமை அம்மை சமேதராய் வீற்றிருக்கும் கோணேசப் பெருமானுடைய திருவடிகளை வணங்கி, ஆலடிக் கணேசரின் அடியிணை தொழுது, பரமாசாரியரை வழுத்தி, சுவாமிகளை நமஸ்கரித்து, திருக்கோயிலுக்கு வந்து கூடியிருந்த ஆண் பெண் இருபாலினர்க்கும் நன்றி கூறிப் பிரசங்கத்தைத் தொடங்கினர். "நோன்பென்பது கொன்று தின்னாமை" சைவசமயிகள் கைக்கொள்ளும் விரதங்களை சிறந்தவை; அவைகளுள், சிவராத்திரி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சஷ்டி என்னும் நான்கு விரதங்களாயினும் அவசியம் அநுஷ்டிக்கப்படவேண்டியன; விநாயகப்பெருமான் பிரணவடிவம்: விசேஷமாக மாணாக்கருக்கு விநாயக விரதம் பெரிதும் இன்றியமையாதது: என்னும் விஷயங்களும், விநாயக சதுர்த்தி "அருமபிய இடரெலாம் அறுக்கத்தக்கது, பெரும்பிணி முழுவதும் பெயர்க்கத்தக்கது, பொரும்பகை வலிகளும் போக்கத்தக்கது, விரும்பிய பொருளெலாம் விளைக்கத்தக்கது" என்னும் செய்யுட் பொருளும் விரித்துக் கூறப்பட்டன. பின்பு ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் குறிப்புரை கூறி, பிரசங்கங் கேட்டு மகிழ்வெய்திரேனாரையும், பிரசங்கம் புரிந்த ஸ்ரீ. மா. பீதாம்பரம்பிள்ளை அவர்களையும், தொண்டர் கூட்டத்தினரையும் ஆசீர்வதித்தனர். தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியபின் திருவிழா நடத்தப்படலாயிற்று. வெள்ளிக்கிழமை தோறும் பிரசங்கங்கள் செய்யப்படுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன. அடியார் விருப்பம் நிறைவேறுமாறு கணேசப்பெருமான் திருவருள் பாலிப்பாராக. கடித.

## நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம்

இச்சங்கத்தின் விசேஷ கூட்டமொன்று சுதேசன் வித்தியாசாலை மண்டபத்தில் நிகழும் ருத்ரோத்கா வருஷம் ஆடிமா 26-ந் டி (10-8-25) ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணியளவில் சங்க உப அக்கிராசனர் ஸ்ரீ தெ. ஆ. தெ. பெரிய சாமிப்பிள்ளையவர்கள் அக்கிராசனத் தமரத் தேவாரபாராயணத்தோடு ஆரம்பமாயது. கலாசாலை பாணவர் அருட்பா வோதலும் ஸ்ரீமத் சுவாமி விபுலாநந்தர் அவர்கள், 'சமயக் கல்வியின் அத்தியாவசியகம்' என்னும் விஷயத்தைப் பீடிகையாகக் கொண்டு சபையோர்க்கும் மாணவர்க்கு முபயோகமாகும்படி தாம் இம் மாகாணத்தில் நடாத்தும் சைவப் பாடசாலைகளிலுள்ள சமயபாட வொழுங்கையும் தம்மனுபவத்தையும் எடுத்துக் கூறிப்பின் தற்காலத்துள்ள முறையோரிற் பலர் தாம் கலாசாலையை விட்டுப் புறப்படுதலும் கற்கவேண்டியன முழுமையுங் கற்றுமுடித்தவர்களாக எண்ணி ஆணவ மேற்றத்தக்குரியவராய் ஐரோப்பியர்க்கும் நன்கு மதிக்கப்பட்டுத் தம் சுவபாஷையிற் பாஷாந்தரப்படுத்தப்பட்டனவுமாகிய திருக்குறள் தேவாரம் திருவாசகம் முதலிய தமிழ் மறைகளும் சிவஞானபோதம் சிவஞான சித்தியார் ஆகிய சித்தாந்த நூல்களும் தாய்ப்பாஷையாகிய நம் செந்தமிழ் மொழியில் நிறைந்து பொலிந்து பல்கிப் பரவிக்கிடக்கவும், தம் தொழில்நேர மொழிந்த நேரங்களில் அவற்றைக் கற்க முயற்சியாது தம் சிறுவர்களைத் தாமும் அவர் சிறு வயசிலேயே ஆங்கில பாடசாலைக்கும் பிறமதஸ்தர்கள் பாடசாலைக்கும் அனுப்பித்தாமும் கடதாசி விளையாட்டு முதலியவற்றிலும் வர்த்தமானப் பத்திரிகைகளையே நெடுக வாசிப்பதிலும் தம் தொழில் நேரமொழிந்த நேரங்களை அவமாக்குகின்றார்களென்றும், ஒரு சாதியாரின் உயர்வு தாழ்வு அச்சாதியிலுள்ள ஒவ்வொருவரிலும் தங்கியிருப்பதால் ஒவ்வொருவரும் சமய, பாஷை, தேச அபிமானம் பூண்டவர்களாய்ச் சமயநூல்களைத்தாமே முந்திக் கற்று மற்றையோர்க்கு மவற்றைப் போதித்தல் வேண்டுமென்றும், ஞாயிறுவாரங்களிற் சமயபாட வகுப்புக்களை யொழுங்கு செய்து கற்றலும் கற்பித்தலும் வேண்டுமென்றும், முன்னுள்ள வித்துவசிரோமணிகளாகிய திருவள்ளுவர் நெசவுத்தொழில் செய்து கொண்டிருந்து 'திருக்குறள்' என்னும் நூலை யெழுதியும் கூலவாணிகன் சாத்தனார் நெல் வியாபாரஞ் செய்துகொண்டு 'மணிமேகலை' என்னும் நூலை யெழுதியுமுள்ளாராதலின் நாமுமவ்வாறு செய்ய முயற்சித்தல் வேண்டுமென்றுங் கூறித் தம் உபந்நியாசத்தை முடித்தார்.

பின் காரைச் சிவனடியார் கூட்டத்தைச் சேர்ந்தவரும் 'குமரன்' பத்திரிகாசிரியருமாகிய திருவாளர். செ. முருகப்பச் செட்டியார் அவர்கள் தாம இலங்கையில் வந்திறங்கிச் சென்ற சில தினங்களாகக் கொழும்பு நீர்கொழும்பு கண்டி யாதியாமிடங்களிற் செய்த உபந்நியாசங்களால், பேசுஞ் சக்தி குறைந்தவராயிருந்தபோதிலும் நம்முன்னோர் புராதனமான சரிதமும் கல்வியறிவொழுக்கமும் தெய்வ பக்தியும் செல்வமும் நிறைந்தவர்களாயிருந்தார்களென்றும் தற்காலத்துள்ளவர்களோ எல்லாச் சக்தியுமற்றுக் கல்வியறிவொழுக்கங்களிற் குன்றித் தாய்ப் பாஷையாகிய தமிழ் பேசத் தெரியாதவர்களாயும் வறியவராயும் பலவகையபிமானங்களுமற்றவராயும் இருத்தலைக் காணுந்தோறும் மனம் வருந்த வேண்டியிருக்கிறதென்றும், இவர்களை முன்னேறச் செய்வதற்குப் பல வழிவகைகள் இருந்தும் அவற்றைக் கவனியாதிருத்தல் இப்போதுள்ள நிலையை யின்னுங் குறைக்கும் என்றும், இந்தியரால் நெசவு செய்யப்படும் சகருடைகளையாதரித்து இந்தியரைத் தைரியப்படுத்தவேண்டுமென்றும், மனுஷர் போற் பகுத்த உணர்ச்சியுடையனவாகிய யானை, குதிரை, மாடு, ஆடு முதலியன தாவரங்களையே யுணவாகக்கொண்டு தேக சௌக்கியமும் பெலமுமுடையனவாயிருக்க, ஆறறிவுடைய மனுஷராகிய நம்மவர் இவற்றைக் கவனியாது மாமிசம் புசித்தல் வெட்கமான காரியமென்றும், இவற்றையுண்டு கொண்டு தம்மைச் சைவர் என்று கூறுதல் இழிவான காரியமென்றும், ஆதலினால் சைவ நன்மக்கள் யாவருமதை யொழிதல் வேண்டுமென்றும், இவற்றின் நன்மை தீமைகளைப் பகுத்துணர்வதற்குக் கல்வியறிவே யத்தியாவசியகம் என்றும் கல்வியறிவிலும் சமயக் கல்வியே ஆன்ம ஈடேற்றத்திற்குரிய தென்றும் முற்காலத்துள்ள பெரியோர்கள் கோயில், மடம், அன்னசத்திரம் முதலியவற்றையாக்குவதிற் பெரும் தொகைப் பணம் செலவிட்டும் அவற்றை நடாத்தும் வகையை யறிய வைகளும் கல்வியறிவின்மையால் அவற்றுல் நாமடைந்த வுபயோகம் வரவரக் குன்றுகின்றதென்றும், ஆகலினாற் கோயில் மடம் அன்னசத்திரம் கட்டுவதிலும் கல்வியறிவூட்டலே கூடிய தருமமாகுமென்றும், கல்வி விஷயமாக உழைத்தல் விசேஷமென்றும், கோயில் அன்னசத்திரம் மடம் ஆதியவற்றை நடாத்தும் முகாமைக்காரர் கல்வியொழுக்கங்களிற் சிறந்தவர்களாயிருத்தல வேண்டுமென்றும், அப்படியிருந்தாற்றான் அவற்றின் நோக்கம் நிறைவேறும் என்றும் கூறித் தம் உபந்நியாசத்தை முடித்தனர்

பின் கொழும்பிலிருந்து வந்திருந்த திரு வ. ரு ம. இலட்சுமணன் செட்டியார் அவர்கள் எழுந்து தாம் இச்சங்கத்தையும வித்தியாசாலையையும், பன்முறை தரிசித்திருப்பதாகவும், இவற்றின் நோக்கங்கள் மிகவும் பாராட்டத்தக்கனவென்றும், வித்தியாசாலை வரவர விருத்தி யெய்திவருகிறதென்றும் இவ்வித்தியாசாலை இப்போது அரசினரால் நன்கு மதிப்பிடப்பட்டிருக்கிறதென்றும் பிள்ளைகளின் தொகை வரவரக் கூடிவருகிறதையும், மாணவர் கல்வி விஷயமாய் அதிகம் திருந்திவருவதையும் காணும்போதும், கேட்கும்போதும் சந்தோஷத்தக்கிடனுகின்றதென்றும், இவ்வகையான வித்தியாசாலைகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப்படின் நம்தமிழ்மொழியும் சாதி சமயமும் விருத்தியடைவதற்கையமில்லை யென்றுங் கூறி முடித்தனர்.

பின் காரியதரிசி ஸ்ரீ. ச. சம்பந்தர் அவர்களும், ஆசிரியர் ஸ்ரீ. சி. ஆழ்வாப்பிள்ளையவர்களும் உபந்நியாசகர் இருவர்க்கும் சபையார்க்கும் ஸ்துதி கூறத் தேவாரபாராயணத்தோடு சபை 9மணியளவிற் சமாப்தியாயிற்று. கடித.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு ந. சு ப. கரு. பழனிச்சாமிப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | ட. | ரூபா. ச. | ஊர். | பெயர். | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|---|
| 1924ஆ ஜூன்மீ. | | | | | |
| 344 | 12 | 5 50 | செட்டித்தெரு | சுப்பிரமணியஞ்செட்டி செல்லக்கண்ணு | பொன் இமிட் கல்வைத்த பட்டன் 2 |
| 378 | 21 | 10 | அத்தியடி | நன்னித்தம்பி சபாபதி | வெள்ளித்திருகுபோட்ட கொண்டப்பூ 1 |
| 379 | 21 | 51 | கந்தர்மடம் | முருகேசு கணபதிப்பிள்ளை | பொன் குண்டுச்சங்கிலி 1 வெள்ளி ஒட்டியாணம் 1 |
| 380 | 21 | 12 | கன்னாகட்டி | கந்தையா வள்ளியம்மை | பொன் சரட்டட்டியல் 1 |
| 387 | 23 | 50 | தலையாளி | முத்துக்குமாரு முருகேசு | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 398 | 25 | 55 | சுண்டிக்குளி | காசியர் கந்தையா | பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |
| ஜூலைமா. | | | | | |
| 464 | 11 | 40 | கந்தர்மடம் | கந்தன் சின்னத்தம்பி | பொன் தாலிக்கொடி 1 |
| 466 | 12 | 30 | உரிசட்டுவான் | சின்னட்டி இராமலிங்கம் | பொன் பட்டணக்காப்பு 1 |
| 467 | 12 | 40 | நீராவியடி | கந்தர் சங்கரப்பிள்ளை | பொன் பீலிக்காப்புச்சோடி 1 |
| 495 | 20 | 12 | வண்கிழக்கு | ஆறுமுகம் கந்தையா | பொன் சாதாமோதிரம் 1 |
| 498 | 21 | 6 | வண்மேற்கு | கந்தசாமி வேலுகோபால் | பொன் வெள்ளைக்கல் கடுக்கன் சோடி 1 |
| 518 | 23 | 35 | வண்மேற்கு | நாகனுதர் தாமோதரம்பிள்ளை | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 529 | 30 | 24 | சோனகதெரு | முகம்மது அப்துல்காதர் முகமது மீராமுகைதீன் | பொன் கெட்டிக்காப்புச்சோடி 1 |
| ஆகஸ்ட்டுமீ. | | | | | |
| 535 | 1 | 70 | பரங்கித்தெரு | கே. எம். அந்திரிஸ் | பொன் கொலுசுக்காப்புச் சோடி 1 |
| 557 | 7 | 77 | அத்தியடி | கந்தையா சண்முகம் | பொன் மருக்கன் சிகப்புக்கல் பதைக்கத்துடன் சாட்டட்டியல் 1 |

விற்பனவு:— ருத்ரோத்கா ஆவணிமீ 13உ (28-8-25) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஷடுபட்டநகை பிறகேங்கலாக டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 694.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்கிழக்கு நா. முத. சொக்கலிங்கம் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல. | ட. | ரூபா. | ஊர். | பெயர். | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|---|
| 1924ஆ ஜூன்மீ. | | | | | |
| 576 | 16 | 25 | வண்கிழக்கு | சின்னத்தம்பி வேலுப்பிள்ளை | பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1 |
| 581 | 17 | 10 | வண்கிழக்கு | கார்த்திகேசுப்பத்தர் கந்தசாமிப்பத்தர் | பொன் தட்டுமணிக்கோர்வை 1 |
| 629 | 28 | 65 | ,, | ,, | பொன் வெள்ளியுடன் கலந்த கொண்டைப்பூ 1 |
| 630 | 28 | 50 | ,, | ,, | பொன் சுற்றோடு சோடி 1 |
| 631 | 28 | 60 | சோனகதெரு | சுலுத்தான் அப்துல்காதர் செயினுமுகம்மது | பொன் பழுதுள்ள சவடி 1 |
| ஜூலைமா. | | | | | |
| 658 | 7 | 50 | சொக்குவில்மேற்கு | நாகநாதர் பொன்னுச்சாமி | பொன் இரண்டு கல்லில்லாத அரைக்குதிரைப்பவுண் நாலுடன் முரிந்த குண்டுச்சங்கிலி 1 |
| 659 | 7 | 80 | வண்கிழக்கு | கார்த்திகேசுப்பத்தர் கந்தசாமிப்பத்தர் | முழுக்குதிரைப்பவுண் இரண்டுடன் சங்கிலியட்டியல் 1 |
| 660 | 7 | 50 | கோண்டாவில் | பசுபதி கந்தையா | பொன் ஒன்றில் திருகில்லாத பழுதுள்ள பட்டணக் காப்புச்சோடி 1 |
| 662 | 8 | 50 | வண்கிழக்கு | சிவப்பிரகாசம் நாகலிங்கம் | பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 667 | 9 | 15 | வண்மேற்கு | ஆள்வாப்பிள்ளை இல்லையாபிள்ளை | பொன் மோதிரம் திருகில்லாத தோடு சோடி 1 |
| 668 | 10 | 130 | வண்கிழக்கு | சிதம்பரசுப்பையாச்செட்டி வைத்திலிங்கம்செட்டி | பொன் டிம்மிப் பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 பட்டணக் காப்புச்சோடி 1 |
| 702 | 19 | 60 | மானிப்பாய் | குட்டித்தம்பி சரவணமுத்து | பொன் பழுதுள்ள பட்டணக்காப்புச் சோடி 1 |
| 820 | 22 | 20 | ஆசிப்பத்திரிப்படி | செல்லையா வேலுப்பிள்ளை | பொன் முகப்பில்லாத தாலிக்கொடி 1 |
| ஆகஸ்ட்டுமீ. | | | | | |
| 758 | 2 | 35 | கந்தர்மடம் | வயிரமுத்து கதிரவேலு | பொன் முகப்பில்லாத பழுதுள்ள கம்பிப்பூரானட்டியல் 1 |
| 768 | 3 | 20 | சோனகதெரு | பாக்கியம்தம்பி கச்சிமுகம்மது | பொன் இமிட்டேசன் கல் மோதிரம் 1 அரும்புத்தடை 2 |
| 771 | 3 | 53 | நல்லூர் | கணபதியார் நாகலிங்கம் | பொன் பட்டணக்காப்புச் சோடி 1 |
| 786 | 6 | 55 | சோனகதெரு | செயினுமுகம்மது முகம்மதுஅப்துல்காதர் | பொன் சொண்டைக்கூர் 1 மோதிரம் 1 வெள்ளிப்பாதசரம் சோடி 1 தண்டை சோடி 1 |
| 790 | 6 | 35 | புங்குடுதீவு | மா. தம்பையர் மார்க்கண்டேயர் | பொன் சுற்றோடு சோடி 1 கொண்டைப்பூ 1 வெள்ளிக்கால்சங்கிலி 1 |
| 791 | 6 | 25 | நீராவியடி | கந்தர் ஆறுமுகம் | பொன் பட்டக்காப்பு 1 |
| 793 | 7 | 25 | வண்மேற்கு | சுப்பிரமணியஐயர் சாமிநாதஐயர் | பொன் வெயூசி சாதாமோதிரம் 1 |
| 804 | 10 | 135 | சொக்குவில்மேற்கு | ஆறுமுகம் சோமசுந்தரப்பத்தர் | பொன் ஒவ்வொருவரச் சன்னம் வைத்த குச்சிசோடி 1 |
| 806 | 10 | 65 | வேலணைகிழக்கு | ஐயம்பிள்ளை ஆசைப்பிள்ளை | பொன் பட்டணக்காப்புச்சோடி 1 |

விற்பனவு:— ருத்ரோத்கா ஆவணிமீ 13உ (28-8-25) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகேங்கலாக டிை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 699)


25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

மேற்படி ஜீ. வ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனுமாய் (1) அனுப்பப்படும்.

### இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.

அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியதுணமுள்ளது!! இதை ஒரு முறை பரீக்ஷை பாருங்கள்

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரீக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரு. 10-0-0 50-பில்ஸ் ரு. 4-0-0 20-பில்ஸ் ரு. 2-0-0 வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணப்படவில்லை. தங்கள் ஜீ. வ மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம். வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேணுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்ட் கொடுக்கப்படும்).

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்து உடனே தீர்க்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் ரு, மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

### புஷ்பிக ரோஸ் பற்பொடி

பொறுக்க முடியாத பல்வலியை ஒருகொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, எகிர் கரைவு, எகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாக்கெட் 1-க்கு ரூபா 2-0-0 வியாபாரிகளுக்கு 6-டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல் துலக்குவதற்கு ரம்மியமாயும் வல்லமையுடனிருக்கின்றன, வேணுமென்பவர்கள் பழனி, டி ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

### கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பழுதடை காலத்தில் உண்டாகும் மயிர்வலியை மிக ஆச்சரியமாய் அர்த்தநாழிகையில் நிறுத்தும் காலாகாலத்தில் பிரயபடி பருவிக்கடை ஆகும். பலஹீனம், மலபந்தம், ஜீரணக் குறைவு முதலிய கெர்ப்ப சம்பந்தமான சகல வியாதிகளையும் தீர்க்கும். புட்டி ரூபா 2

### மாந்திரிக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்த காரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும். ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9 முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

இலங்கை, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மாத்திரை விலையும், பார்சல் செலவு ரூபா 2 ம் சேர்த்து முற்பணம் அனுப்பினால் மாத்திரம் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

(Q 56. B)

யாழ்ப்பாணப் பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்
எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்
தயவுசெய்து
தெரிவு செய்யுங்கள்.

(Q 66)

நிலத்திற்பட்ட இடத்திற்கும் நானிருக்க இடத்திற்குமிடையேயுள்ள தூரம் இரண்டொன்று அங்குலந்தானிருக்கும். அந்த அடி என் தலையிற் பட்டிருக்குமானால் என்மண்டை நிச்சயமாக உடைந்திருக்கும். இச்செய்கையினாற் பேய் என்னை எச்சரித்ததென்று எண்ணிக் கொண்டு உடனே மூவரும் அந்த அறையை விடுத்து வெளியே ஓடிவந்தோம்.

* * *

காலை 9 மணி தொடக்கம் பின்னேரம் இரண்டரைமணிவரையில் இடையீடின்றி இப்பேயின் விளையாட்டெல்லாம் நடைபெற்றன. வேடிக்கை பார்க்க வந்தவர்களுள் அநேகர் தத்தம் இடங்களுக்கு மீண்டுவிட்டார்கள். நானும் மிகவும் அலுப்படைந்து, அடுத்தநாட் காலை வருவோம் என்ற எண்ணத்துடன் வீட்டிற்கு மீண்டேன். அடுத்தநாள் அதிகாலையில் கோனேரி வீட்டிற்குச் சென்றேன். அங்கே அந்த இளம்பெண்ணைக் காணவில்லை. சிலர் அந்த இளம்பெண்ணை "உன்னாலே தான் இந்த வீட்டிலே பேயின் சேட்டைகள் நிகழ்கின்றன; நீ இன்னும் இங்கே நின்றாற் பொலிசார் உன்னைப் பிடித்துச் சிறைப்படுத்திவிடுவார்கள்" என்றுவெருட்டியபடியினால் அந்தப் பெண் தனது நாயகனுடன் தன்னுடைய ஊருக்குப் போய்விட்டாள். அவள் கோனேரியின் இனத்தவள்; சிலகாலம் கோனேரிவீட்டிலே விருந்தாகத் தங்கி நின்றவள். நான் அந்தப் பெண் இருக்கும் ஊருக்குப் போய் அவளையும் புருஷனையும் கோனேரி வீட்டிற்கு மீண்டும் ஒருமுறை வரும்படி கேட்டேன். அவர்கள் வருவதற்குச் சம்மதிக்கவில்லை. அதன்பின் கோனேரி வீட்டிலே அவ்வாறான பேய்ச் சேட்டைகள் நடக்கவுமில்லை. மேலே சொல்லப்பட்ட சம்பவமெல்லாம் நூற்றுக்கணக்கான சனங்களின் சமுகத்திற் பட்டப்பகலில் நிகழ்ந்தன. இவைகளை மனிதர் ஒருபோதும் மறைந்துநின்று செய்தல் முடியாதென்பது வெளிப்படை. உலகத்திலே தத்துவ சாஸ்திரங்களுக்கும் மானுட அறிவிற்கும் எட்டாத எத்தனையோ அற்புதமான இரகசியங்கள் இருக்கின்றன என்பது இதனால் நன்கு விளங்குகின்றது. இந்த உலகத்திலே சிவித்த ஒருமனுஷன் இறந்தபின்னர் பைசாசமாக இப்படியெல்லாம் செய்கின்றானென்வே யூகிக்கவேண்டியிருக்கின்றது.

## மோட்டார்க் கொலை.

நேற்றையதினம் மானிப்பாய் எழுமுள்ளி வீதியிலே கட்டுடை வாசியான கிருஷ்ணர் என்பவரை மோட்டாரதம் ஒன்று இடறி செரித்துவிட்டது. இவர் மானிப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டுச் சிறிதுநேரத்தின்பின்னர் இறந்துவிட்டனரென அறியலானோம்

## பாம்பு கோழியை விழுங்கியமை.

நீராலக்கொடை என்னும் கிராமத்திலே நாலடி ஒன்பது அங்குலநீளமுள்ள ஒருபாம்பு தன்வாயினால் ஒருகோழியைச் சுற்றிப் பிடித்துக்கொண்டு இன்னொரு கோழிக்குஞ்சை விழுங்கும்போது கிராமவாசிகள் அதனைப் பிடித்துப் பிரம்புக் கூடையில் அடைத்துக் கொழும்பு நூதனசாலைக்கு அனுப்பியிருக்கின்றனர்.

## கருங்குளவியினால் மாண்டமை

சென்ற திங்கட்கிழமை புத்தளத்திலே இந்தியகூலியாள் ஒருவன் பனைமரத்திலேறி ஓலைகளை வெட்டும்போது ஓலை ஒன்றிற் கருங்குளவிக் கூடிருப்பதையும் அதிலிருந்து குளவிகள் புறப்படுத்தலைச் சருவவருவதையும் கண்டான். அவன் அதினைவாகக் கூடுகட்டப்பட்டிருக்கும் ஓலையைவெட்டி வீழ்த்தியபின் கீழே இறங்கினான். அந்த ஓலை நிலத்தில் வீழாது பனையின் கீழேயுள்ள ஆலமரத்தின் கொப்பரிற் சிக்கிக்கொண்டது. கூலியாள் இறங்கும்போது குளவிகள் பின்னரும் அவனை வளைக்குத்தின. ஒருவாறு அவன் கீழே இறங்கி அதில் மயங்கி வீழ்ந்து சிறிதுவேளையில் உயிர் துறந்தனன்.

## அகில இந்திய மகாஜனசபை.

இம்மகாஜனசபை வருகிற டிசெம்பர்மீ° காண்பூரில் நடைபெறும். பலமாகாணங்களிலுமுள்ள சபைகள் டிமகாஜனசபை அக்கிராசனர் பதவிக்கு பாபு அரவிந்த கோஷ் அவர்களுடைய பெயரைத் தெரிவித்திருக்கின்றனர். தாம் இவ்வருஷம் மகாஜனசபைக்கு வருதல்கூடாதென்றும், இன்னமும் ஒருவருடகாலம்வரை அப்பதவியை வகிக்கமுடியாதென்றும், தம்மை ஒருவரும் தெரிவுசெய்யவொண்ணாதென்றும் அரவிந்தகோஷ் அவர்கள் உபசாரனைக் கூட்டக்காரியதரிசிக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

## ஒரு புதிய தொத்தாரிஸ்.

இதுகாறும் பிறக்ராசாயும் ஆங்கிலதொத்தாரிசுவாகவும் வேலை பார்த்துக்கொண்டு வந்த வண்ணார்பண்ணை நீராவியடி ஸ்ரீ. க. ஐயாத்துரையவர்கள், தமிழிலும் உறுதி யெழுதுதற்கான பால பண்டிதர்ப் பரீட்சையிற் சித்தியடைந்துவிட்டமையினால், அரசினர் அவருக்குத் தமிழ் தொத்தாசுவாகவும் வேலைபார்த்தற்கான தத்துவம் கொடுத்திருக்கின்றார்கள். பிறக்ரர். ஸ்ரீ. ஐயாத்துரையவர்கள் இப்பொழுது நீராவியடியிலுள்ள தமது கிருகத்திலும் ஊரெழுவிற் கற்பகப்பிள்ளையார் கோவிலுக்கணித்தாகவும் உள்ள தமது காரியஸ்தலங்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் உறுதிகள் எழுதிவருகின்றனர்.

## இரு மீன்பிடிகாரர் மாண்டனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை அம்பாந்தோட்டையிலே மூன்று மீன்பிடிகாரர் ஓர் படவில் ஏறிக் கடலில் மீன்பிடிக்கச்சென்றார்கள். படவு அதிகதூரம் சென்றபின் உக்கிரமான புயலினாற்கவிழ்க்கப்பட்டது. வள்ளம் அபாய நிலையிலிருப்பதைக்கண்ட மூவரும் கடலிற் குதித்துக் கரையைநோக்கி நீந்தத்தொடங்கினார்கள். அவர்களுள் இருவர் மகமதியர் இருவரும் முன்னே நீந்திச்செல்ல மூன்றாமாளாகிய சிங்களவன் பின்னே நீந்திச் சென்றான். இருள் அதிகமாக இருந்தமையினால் முன்னேசென்ற இருவரும் மூன்றுமாளுடைய கண்களுக்குத்தொற்றப்படவில்லை சிங்கள மீன்பிடிகாரன் அதிகநேரமாகக் கஷ்டப்பட்டு நீந்தி ஒருவாறு கரையை அடைந்தனன், இருவரும் ஆழிவாய்ப்பட்டனர்.

## விதானை ஆராய்ச்சி சுடப்பட்டமை.

இந்த ஆகஸ்ட்மீ° 18-ந் உ செவ்வாய்க்கிழமை மாத்துறைக்குச் சமீபமாயுள்ள ஹற்றதும்பா என்னுமிடத்துள்ள ஆராய்ச்சி பொலிஸ் கோட்டுக்குச் சென்று இருவருடன் திரும்புப்போது அவர்மீது விரோதம் பாராட்டிய இருவர் வழியிற் காத்திருந்து துப்பாக்கியினாற் சுட்டார்கள். ஒரு சந்தம் ஆராய்ச்சியின் மார்பைத் துளைத்து வெளியே ஊடுருவிச்சென்றது. மற்றொன்று புயத்தைத் தாக்கியது. துணையாகச சென்ற இருவரும் நிலத்தில் வீழ்ந்த ஆராய்ச்சியைத் தூக்கிச்சென்று பக்கலிலுள்ள வீட்டிற் கிடத்திய பின் வைத்தியசாலைக்குக் கொண்டுபோயினர். ஆராய்ச்சி அங்கு ஆபத்தான நிலையிலிருக்கின்றனர் ஒருவன் சிறைப்படுத்தப்பட்டான். வேலையினின்று நீங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகத்தின் மீது பிடிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஆசிரியர் தேவை.

கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைக்கு இரண்டாம் வகுப்புத் தாராதரப்பத்திரம் பெற்ற ஒரு உபாத்தியாயர் தேவை வேண்டிய விபரங்களை எப்பிடத்தில் நேரிலேனும் கடிதமூலமாக வேனும் அறிந்துகொள்ளலாகும்.

ச. கந்தையா,
வைத்தியசாலை மானேஜர்.
கொக்குவில்-மேற்கு,
26—8—25
(Mis 701)

## கடிதம்.

### இலங்கைச் சைவரும் சைவாபிமானிகளா?

நான் சென்றவாரமே முதல்முதற் கொழும்புக்குப் போயிருந்தேன். அப்பொழுது என்னுடைய சிநேகிதரைக் கொழும்பில் என்ன புதினம் பார்க்கலாம் என்றுகேட்டபொழுது அவர்கள் அங்கே அநேக புதினம் பார்க்கலாமென்றும் அவைகளெல்லாவற்றிலும் நூதனசாலையே மிகவும் சிறந்ததாகவும் சொன்னார்கள். நூதனசாலை என்றசொல்லு என்காதிற் கேட்டமாத்திரத்தில் அந்தக்ஷணமே அதைப் பார்க்கவேண்டும் என்னும் எண்ணம் என் மனதில் குடிகொண்டுவிட்டது. ஆனதால் நான் என்னுடைய சிநேகிதர்களோடு புறப்பட்டுப் போனேன். போகும்வழியில் "விக்டோறியா பாக்" என்னும் பூந்தோட்டத்தைக்கண்டமாத்திரத்தில் நான் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. அப்படி நான் ஆனந்தசாகரத்தில் மூழ்கி இருந்தலைக்கண்ட சிநேகிதர் இதிலும்பார்க்க நூதனசாலை எத்தனையோமடங்கு அதிகமான சந்தோஷத்தைத்தரும் என்றும் சொன்னார்கள். அப்பால் சென்றபோது நூதனசாலைக்கட்டிடம் இதுதான் என்று எனது சிநேகிதர் காட்டினபொழுது சனங்கள் திரள்திரளாய் உள்ளுக்குப்போவதையும் வருவதையும் கண்டேன். நாங்களும் மிகவும் வேகமாகச் சென்றோம். நூதனசாலைக்குள் பிரவேசித்தவுடன் நடராஜமூர்த்தியையே கண்டேன். அப்பாற் சென்றபோது திருநாவுக்கரசுநாயனார், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலியவர்களுடைய திருவுருவங்களைக் கண்டேன். இவைகளைக்கண்டதே நான் அடைந்த துக்கத்துக்கு அளவில்லை. அத்திருவுருவங்களை மற்றும் சமயத்தவர்கள் பார்த்து சைவர்கள் இவ்வளவு தெய்வங்களையும் வணங்குகிறார்களே, என்று பரிகாசம்பண்ணிச் சிரித்தலையும் கண்டேன். புத்தசமயத்தவர்களுடைய சில உருவங்களும் அங்கிருக்கக்கண்டேன் ஆனால் அவர்கள் அவைகளை அப்படிவைத்திருத்தல் கூடாதென்று தங்களுடைய கோயில்களுக்கு அவைகளைக் கொண்டுபோகிறதற்கு உத்தரவு தரும்படி அரசாட்சியாருக்கு மனுப்பண்ணியிருக்கிறார்கள். இவ்வளவுநாளும் சைவசமயிகள் இதைப்பற்றிச் சிந்தியாதிருப்பது துக்கிக்கத்தக்கதே, இனியாகிலும் சிந்திப்பார்களாக.

வே. தில்லையம்பலம்.

[கொழும்பு நூதனசாலையிலுள்ள சைவ சமயத்தினர்ச்குரிய திருவருவங்கள் அனுராசபுரத்தைச சார்ந்த பொலநறுவையிலிருந்த புராதன சிவாலயத்திற்கு உரியனவாம். பல வருடங்கட்கு முன்னர் ஸ்ரீமாங் ஸேர். பொ. அருணசலமவர்கள் இத் திருவுருவங்களைப் பழையபடி பிரதிஷ்டை செய்தற்குத் தரும்படி அரசினரைக் கேட்டபோது அரசினர் கொடுத்தற்கு உடன்படவில்லை. பௌத்த சமயத்தவர்களும் தங்கள் விக்கிரகங்களைத் தரும்படி அரசினரை இப்பொழுது கேட்கின்றனர். இந்தச் சமையத்திலே சைவ சமயத்தவர்களாகிய நாங்களும் பௌத்தர்களுடன் சேர்ந்து எங்கள் திருவுருவங்களையும் தருதல் வேண்டுமென அரசினரைக் கேட்டல் வேண்டும். எங்கள் சட்டநிருபணசபைப் பிரதிநிதிகள் இவ்விஷயத்திலே தலையிடுதல் நன்றும். —பத்திரிகாசிரியர்]

### இந்துசாதனப் பத்திரிகாசிரியர் அவர்கட்கு.

ஐயா,

சென்ற மாதம் 26-ந் திகதி பிரசுரிக்கப்பெற்ற இந்துசாதனப் பத்திரிகையில் தாங்கள் எழுதியவண்ணம் வீண உடைநடை பாவனைகளும் சில அர்ச்சருமங்களும் கதிர்காம மஹோற்சவ காலத்திற் காணப்படத் தொடங்கினவென்றே யாத்திரை காரருள்ளும் பலர் விசனிக்கின்றனர். முன்போலன்றித் தற்காலம் கதிர்காம யாத்திரை மிக மலிந்துகொண்டது. வருடம் வருடம் அதிகமதிகமாக யாத்திரை செய்யும் பக்தர்கள் பெருகுதலை நாம் பார்த்துச் சந்தோஷப்படக் கூடியதாயினும், இவ்விஷயத்தைச் சிறிது உற்றுநோக்குமிடத்து வேறு சில உண்மைகளும் புலப்படுகின்றன. புகையிரத வசதிகள் கூட, மாத்துறைக்கும் திசமகாருவிற்குமிடையே மோட்டர் வண்டிகளும் "பஸ்" வண்டிகளும் கணக்கற்றுஓட, இன்னோரன்ன பிரயாணவசதிகள் பற்பல ஏற்பட, கைவிய தரிசனத்தையே நோக்கமாகவுடைய சிவனடியார்களன்றிப் பிரயாண உற்சாகத்தையும் கொண்டாட்டங்களையும் விரும்புவோரும், வேடிக்கைக்காரரும், ஓர் அற்ப சிரமந்தானே வெனக் கருதி நூற்றுக்கணக்காகப் புறப்பட்டுக்கொள்ளுகின்றார்கள். ஆனிக்கப் போய்ச் சேறு பூசியவண்ணமாகத் தங்கள் விபரீதங்கள் எல்லாம் அந்தக் கலியுகவரதராகிய சுப்பிரமணியப் பெருமான் எழுந்தருளியிருந்து தமதடியார்க்கெல்லாம் அருள் புரியும் மகிமை தங்கிய மகாக்ஷேத்திரத்திற்கு ஆகாவெனப்படைச் சிறிதுஞ் சிந்தியாது, அனேகர் யாழ்ப்பாணம் கொழும்பு முதலாமிடங்களிலிருந்து போசனத்திற்கு வேண்டிய பொருள்களையெல்லாம் சேகரித்து மோட்டர்வண்டிகளிலும் "பஸ்" வண்டிகளிலுமேற்றி, தாங்களும் உல்லாசமாகவுடுத்து அலங்காரமாக நகர்வலம் வருதல் போல் யாத்திரைக்குப் புறப்படுகின்றார்கள்.

இஃதிப்படியிருக்கக் கதிர்காம க்ஷேத்திரத்தின இரசசியமினைதெனவுணராதார் யாரோ சிலரின் ஏவுதலால் அரசாட்சியார் திசமகாருவிலிருந்து கதிர்காமமீறாக ஓர் கற்பாதை நிர்வகிப்பதற்கும், ஆலயத்தைச் சுற்றிச் சிறிது தூரமேனும் காட்டை வெட்டி நாடாக்குவதற்கும் வேண்டிய சில முயற்சிகளை யுத்தேசித்திருப்பதாக அறியவருகின்றது.

இவை யுண்மையாயின் யாத்திரை செல்லும் மெய்யடியாரின் உள்ளக்கிடக்கை இவ்விஷயத்தில் இன்னதென்பதை யறிதல் நன்றாகும். படாத கஷ்டங்களையெல்லாம்பட்டும் காடேறி மேடேறிச் சென்றும் அப்பெருமானுடைய திவ்விய பாதாரவிந்தங்களைப் பணிதலே நோக்கமாகவுடைய மெய்யன்பர்கள் பிரயாண வசதிகளையும் மற்றும் சலாக்கியங்களையும் அதிகம் வேண்டாரானமையின், மேற்படி முயற்சிகளெல்லாம் அளவிறந்த வேடிக்கைகாரரையும் வேடிக்கைகளையும் கூவி கொடுத்துக் கதிர்காமத்திற்கு அழைப்பது போலாகும். வீதிகள் தோறும் தேநீர் சாப்பிக்கடைகளும், வியாபாரக்கடைகளும், விநோதக்காட்சி மண்டபங்களும், இன்னோரன்ன நவீன நாகரீக முறைகளும் ஈழமண்டலத்தின் திவ்விய க்ஷேத்திரமாகிய கதிர்காமத்திற்கு ஒவ்வாதனவாம். அன்றியும் சிவனடியாரின் யாத்திரைக்கும் வணக்கத்திற்கும் பங்கம் விளைக்கக்கூடிய இவை போன்ற அர்ச்சருமங்கள் கதிர்காமத்துள் நுழையாவண்ணம் தடுத்துக் கொள்ளல் எல்லோர் மேலும் பொறுத்த கடனாம்.

இவ்வண்ணமன்றி, வசதிக் குறைவுகள்பற்றி யாத்திரை செய்து அசன பயனை யடையாதிருக்கும் பல்லாயிரக்கணக்கானவர்க் கெல்லாம் வேண்டிய சலாக்கியங்களை உண்டுபண்ணிக் கொடுத்தலும் யாத்திரைசெல்வோர்இப்போது படுகின்ற கஷ்டங்களையெல்லாம களைதலும் சிவனடியார் சேவையை விரும்பி நிற்கும் எல்லோர் மேலும் பொறுத்தகடனாகுமென ஓர் சாரார் அபிப்பிராயப்படுகின்றனர். அதுபற்றி இவ்விஷயம் தங்களாற் கவனிக்கப்படத் தக்கதென நினைக்கின்றேன்.

"சாந்திநிகேதன்"
வெள்ளவத்தை. மு. வைரமுத்து.
20—8—25

## யாழ்ப்பாணஐக்கியவியாபாரசங்கம்.

இச்சங்கத்தின் ஏழாம் வருஷாந்தக்கூட்டம் 1925ஆ ஆவணிமீ 29உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணிவரையில் மேற்படி சங்க "மகாமண்டபத்தில்" நடைபெறும். அத்தருணம் 1925ஆ ஆனிமீ 30உ முடியவுள்ள வருஷாந்தக்கணக்கும், நிருவாககர்த்தர்களின் அறிக்கைப் பத்திரமும் அங்கீகரிக்கப்படும். வேறும் சங்கத்திற்கு ஆகவேண்டிய விஷயங்களும் ஆலோசித்துத் தீர்மானிக்கப்படும்.

18-8-25 க. ஆறுமுகம்பிள்ளை,
(Mis 697) காரியதரிசி

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம். காட்டேசண்டுத் துரையவர்களால் பினனால் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்.

(A) மாங்குளம் மரக்காலையில் இவ்வாண்டு ஆவணி மாதம் 26-ந் திகதி புதனகிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

50 பாலை மரங்கள்.

(B) கிளிநொச்சி மரக்காலையில் இவ்வாண்டு ஆவணி மாதம் 27-ம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

50 பாலைமரங்கள்.
20 முதிரை மரங்கள்.

(C) யாழ்ப்பாணம் விறகுகாலையில் இவ்வாண்டு (i) புரட்டாதி மாசம் 1-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

75 பாலைமரங்கள்.

(ii) புரட்டாதி மாசம் 2-ம் திகதி புதன்கிழமை காலை 9 30 மணிக்கு விற்கப்படும்மரங்கள்.

50 பாலைமரங்கள்.
25 முதிரை மரங்கள்.

(D) காங்கேயன்துறை மரக்காலையில் இவ்வாண்டு புரட்டாதி மாசம் 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

50 முதிரை மரங்கள்.
50 தந்திக்கம்பி மரங்கள்.

(Sgd) R. M. White.
கண்டி வனபரிபாலனர்,
காட்டுக்கந்தோர்
ஆவணிமீ 11உ 1925.
(G 540)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள், நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்டமரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஓடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
நா பி. வல்லுவெட்டித்துறை. (H. 37.)

## "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க சமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.

(H. 40)

## சேலம் ஜவுளிதினிசுகள்:

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செப்பு சம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி & சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம், தென்இந்தியா.

(H. 41.)

## இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசு குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக்கொடி, காஞ்சிக்கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், ஜிமை வயிரக் கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

கா. பிளே செட்டி அண் கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு கா. சி. ச. மூமு. முத்துக்கிருஷ்ணநாயுடு என்பவரிடமில் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம்பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| இல | கட. | ரூபா. | ஊர் பெயர் நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| | | | 1924-ம் ஆண்டு மே மாசம் |
| 678 | 19 | 250 | பரங்கித்தெரு யோசேப்பு பேதுருப்பிள்ளை பொன் டிம்பிபதக்கத்தில்முத்து37 சிகப்புக்கல் 1-ம் பச்சைக்கல் 1-ம் பதித்த கெட்டிப்பூரணட்டியல் 1 முத்து 6, சிகப்புக்கல் 1-ம் பதித்த காதோலை சோடி 1 |
| 719 | 29 | 20 | அளவெட்டி சந்தவனம் சின்னத்தம்பி இமிட்டேஷன் நீலக்கல் மோதிரம் 1 |
| 727 | 31 | 40 | வண்மேற்கு சிதம்பரப்பிள்ளை பொன்னையா சிகப்புக்கல் 6 வெள்ளைக்கல்1 பதித்த காதோலை சோடி 1 |
| | | | ஜூன் மாசம். |
| 747 | 2 | 35 | கல்லூர் முத்தையா செல்லக்குருக்கள் பொன்பழையபட்டணக்காப்புச் சோடி 1 |
| 778 | 6 | 20 | சோனகதெரு அசனுமரைக்காயர் அப்துல்கரீம் பொன் தனிப்பட்டுமணிக்கோர்.1 |
| 806 | 11 | 25 | மானிப்பாய் வைத்திலிங்கம் இளையதம்பி பொன்சாதாமோதிரம்1 இமிட்டேஷன் சிகப்புக்கல் 1 வைத்த மோதிரம் 1 பொன் கொடி 1 |
| 828 | 16 | 160 | சேட்டடி வேலாயுதர் நவசிவாயம் பொன் சங்கிலிக்கொடி 1 |
| 839 | 17 | 60 | மாவியப்பிட்டி கதிரித்தம்பி சுப்பிரமணியம் பொன் புருத்தாலிக்கொடி 1 |
| 844 | 18 | 85 | கொக்குவில் மாப்பாணர் மாரிமுத்து பொன் பீலிக்காப்புச் சோடி 1 |
| 858 | 20 | 30 | கண்டிக்குளி யக்கோமுத்து மனுவர்ப்பிள்ளை பொன் சிறுகெட்டிக்காப்புச்சோடி 1 கொண்டப்பூ 2 |
| 880 | 23 | 65 | மண்டதீவு கதிரவேல் சண்முகம் பொன் கினிக்காலட்டியல் 1 |
| 881 | 23 | 50 | செம்மாதெரு அப்துல்க்கனி பீர்முகம்மது பொன் புஸ்பராக மோதிரம் 1 கிளாவர் மோதிரம் 1 அரும்பு மோதிரம் 2 திருகில்லாத காதப்பூச் சோடி 1 மனுக்கன் சிகப்புக்கல் பதக்கத்துடன் பிச்சுமணிக்கோர்வை1 |
| 885 | 24 | 150 | சங்குவேலி சின்னத்தம்பி கனகசபை பொன்திருகு சுரையில்லாத கெட்டிக்காப்புச் சோடி 1 |
| 888 | 25 | 11 | வண்வடக்கு கணபதிப்பிள்ளை சந்தையா பொன் சாதாமோதிரம்1 பொன்தடை1 |
| | | | ஜூலை மாசம். |
| 923 | 2 | 135 | சிறும்பியடி சந்தையா சுந்தரம்பிள்ளை பொன் திருகு சுரையில்லாத தாலிச்சங்கிலிக்கொடி 1 |
| 938 | 7 | 20 | நவாலி காத்தி சபாபதி பொன் பதக்கத்துடன் சவுக்குமணிக்கோர்வை 1 |

விற்பனவு:— குரோதன ஆண்டு ஆவணிமீ 14உ (29—8—25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை பிறகீங்கலாக மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில்விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 695.)

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிதள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்கூடிய தமிழ்வைத்தியகான பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்பிளாஸ்(முதல்தர)தேவஔஷதக்கென தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ள நாளும் மறவாதது.

பழனி, சி எம். சாமி

## மகாவீரிய தங்கபஸ்பம்.

பரிசைக்ஷக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகல வியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒருமுறை பரிக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபாரசக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதையும் திரும்ப உண்டாக்குகிறது. மேகவியாதிகள், பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குஷ்டம், கருமேகம் குலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1 மண்டலம் 48 நாள் பஸ்பம் ரூபா 20, அரை மண்டலம் 24 நாள் பஸ்பம் ரூபா 10.

பழனி, சி. எம். சாமி உத்தரவாதம்

## குருபஸ்பம்

க்ஷய,காசரோக சஞ்சீவி உள்ளது.

இப்பஸ்பம் நமது குரு பெரிய மகானவர்களால் உபதேசிக்கப்பட்டது. இவ்வியாதிக்கென்றே தயார்செய்தது. க்ஷயம, காசம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம் இவைகளைக் குணப்படுத்தி நல்ல பசி, ரததவிர்த்தி, பலம், சரீர இடை இவைகளைக் கொடுத்துப் பூரணசுகத்தைத்தரும்.

நாற்பதுநாள் மருந்து ரூ. 40. இருபதுநாள் மருந்து ரூ. 20. பத்துநாள் மருந்து ரூ 10.

## குருநாகபஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்பிரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும். சீழ்மூலம், இரத்த மூலம், குத்தல், மூல முளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம, ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், சோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் லக்ஷகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

## கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி எனலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்ப் பகிஷ்டையாகும். கெர்ப்பாசயம், கிளைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும்நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அனுபவமானது. புட்டி ஒன்று விலை ரூபா 2.

## மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், பிரேத்தகாரிய சித்தி, தனலாபம், புத்திர சந்தானம், தெய்வ அனை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி, முதலியன நீங்கும். சத்து 1க்கு ரூபா 2. 6 சத்து ரூபா 10.

## ரோம சங்காரி.

ஐந்தேநிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது. தோல் கெடாது. புட்டி 1க்கு அணு 8.

## சர்வபடை நிவாரணி.

சகல மேகப்படை, ஊறல், பூச்சிக்கடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள் ஓரேநாளி உதிர்ந்துவிடும். உடனே அரிப்பு நிற்கும். தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், நர்திமேகம், மற்றும் மேகரோகங்கள், நீர்ச்சுருக்கு, எரிச்சல், குத்த உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் தீரும்; தவறாது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2. வி. பி. சார்ஸ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 b)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

துளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னூடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் உத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிரசிப்பபகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினு முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.